# அலை ஓசை

சமய – சமூக – இலக்கிய சஞ்சிகை

சித்திரை – ஆனி 2018

ISSN 2513 - 2547




50/-

**" The Truth will set you free ( Jh. 8:32 )**
**Fake News and Journalism for peace "**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை ஓசை

சமய – சமூக இலக்கிய சஞ்சிகை
அலை 03 ஓசை 02
சித்திரை – ஆனி 2018

ஆசிரியர் :
அருட்பணி. றொகான் பேர்னாட்

இணை ஆசிரியர் :
கிறிஸ்டி முருகுப்பிள்ளை

ஆசிரியர் குழு :
சூசை எட்வேட்
செ. ஞான ராசா
சுரேந்தினி மணிவண்ணன்
அனட்.எம்.சந்திரகாந்தன்

ஆலோசகர்:
அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம்

கணனி எழுத்துருவாக்கம்
செல்வி.எக்ஸ்.தர்சனா

சித்திரங்கள்:
வே. கஜேந்திரன்
ர. கோகுல்

வெளியீடு:
அலை ஓசை கலைத் தொடர்பகம்
திருகோணமலை மறைமாவட்டம்

முகவரி:
அலைஓசை கலைத் தொடர்பகம்
இல.17 புனித அந்தோனியார் வீதி,
திருகோணமலை.
mail: trincoalaiosai@gmail.com

பதிப்பகம்:
அஸ்ரா கிராப்பிக்ஸ்
இல.40. சிவன் வீதி,
திருகோணமலை.
0777426175 – 0777426174

விலை ரூபா 50.00
ஆண்டுச் சந்தா – ரூபா 300.00
(தபாற் செலவு உட்பட)

ஆசிரியர் ஓசை ...... 01
அலைபேசியின் தாக்கம் ...... 02
போதையிலிருந்து ...... 04
கவிதை ...... 06
இளையோர் ஓசை ...... 07
மறையுரையிலிருந்து ...... 09
சீரழிக்கும் சீட்டு ...... 11
கவிதை ...... 13
மறைமாவட்டச் செய்தி ...... 14
கவிதை ...... 15
கத்தோலிக்கத் திருமறை ...... 16
மருத்துவமும் விஞ்ஞானமும் ...... 18
கவிதை ...... 20
முகப்புத்தகத்திலிருந்து ...... 21
மாணவர் ஓசை ...... 23
கடுகுக் கதை ...... 24
திருத்தந்தை செய்தி ...... 25
நலம் நாடி ...... 26
உருவகக் கதை ...... 28
இலக்கிய ஓசை ...... 30
அரசியல் அலசல் ...... 31
உயிர்ப்பின் உவகை ...... 33
அரிவையர் ஓசை ...... 34

ஆக்கங்களுக்குப் பொறுப்பு படைப்பாளிகளே – ஆசிரியர்

ALAI OSAI CULTURAL CENTRE
NP.17, ST ANTONY STREET,
TRINCOMALEE.
026 222 0077

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் ஓசை

உயிர்ப்பின் பெருவிழா வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் அதே வேளை தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களையும் எம் சகோதரர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

எதிர்வரும் வைகாசி மாதம் 13ᵈ திகதி (2018) உலக திருச்சபை உலக தொடர்பாடல் தினத்தை சிறப்பிக்கிறது. உலக தொடர்பாடல் தினத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வண்ணம் திருத்தந்தை சுற்று மடல் வரைந்து பங்குகள் தோறும் அனுப்புவது வழமை. அந்த வகையில் இவ்வாண்டுக்கான சுற்று மடலிலே "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோ 8:32) போலி செய்திகளும் ஊடகத்துறையும் சமாதானத்துக்காவே செயற்படட்டும்" **"The truth will Set you Free" (Jh 8:32) fake news and Journalism for Peace"** என தலைப்பிட்டுள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அடிகளின் மடலிலே இவ்வாறு குறிப்பிடுகின்றார். அதாவது எப்போது நாங்கள் கடவுளின் சித்தத்திற்கு விசுவாசமாக உள்ளோமோ அப்போது தான் எமது தொடர்பாடல் உண்மையையும், நல்லதையும் பொறுப்புணர்ச்சியோடு தேடுபவர்களாகவும் அதனை திறமையாக வெளிப்படுத்து பவர்களாகவும் இருப்போம்.

வேதாகமத்திலுள்ள தொடக்க நூலிலே(3:1-7) சாத்தான் கடவுள் கூறியதற்கு புறம்பான பொய்யான செய்தியை சொல்கிறான் ஏவாளும் அதனை நம்பிவிட்டாள் "அந்த மரம் உண்பதற்கு சுவையானதாகவும் கண்களுக்கு களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு பெண் அந்த பழத்தை பறித்து உண்டாள்" (தொ.நூல் 3:5) இந்த பகுதி எமை சிந்திக்க தூண்டுகின்றது.

பொய்யான, போலியான தகவலை நம்பியதால் பயங்கரமான கொடிய விளைவுக்கு ஆளாகலாம் என்பதாகும்.

ஊடகவியலாளர்கள் செய்திகளின் பாதுகாவலர்கள். இன்றைய உலகில் இவர்களது ஒவ்வொரு செயற்பாடும் ஒரு தொழில் அல்ல மாறாக அவர்களது மாபெரும் பணி என கருத வேண்டும். ஆகவே துல்லியமான உண்மை நிறைந்த மூலக்கரு அத்தோடு தொடர்பாடல்களை பாதுகாப்பது என்பவை தான் நல்லவற்றை ஊக்கப்படுத்துவதாகவும் உண்மையை வெளிப்படுத்துவதாகவும் சமூக ஒற்றுமைக்கும் சமாதானத்திற்கும் வழியை ஏற்படுத்துவதாகவும் அமையும்.

மக்களால் உருவாக்கப்பட்ட ஊடகத்துறையானது மக்களுக்காகவே குறிப்பாக அநீதியால் பாதிக்கப்பட்டு ஆனால் குரல் எழுப்ப முடியாமல் இருக்கும் மக்களுக்காகவே.

இவ்வாறு ஊடகத்துறையிலே அதாவது பத்திரிகைத் துறையிலோ, இலத்திரனியல் ஊடகத்திலோ எந்த ஊடகமாக இருந்தாலும் உண்மையை மாத்திரம் எடுத்துச் சொல்லவேண்டும் என எமது திருத்தந்தை ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்.

நாமும் இதனை சிரமேற்கொண்டு உண்மையை மாத்திரம் வெளிக் - கொணர்வோம். குரல் அற்று இருக்கும் மனிதர்களுக்காக குரல் கொடுப்போம் அதன் வழியாக "நானே உண்மை" என வெளிப்படுத்தும் இயேசுவின் உண்மைக்கு சாட்சிகளாவோம்.

.... **ஆசிரியர்**

மனிதர் தம் வழியை வகுத்தமைக்கின்றார் :
ஆனால் அதில் அவரை வழிநடத்துபவரோ ஆண்டவர். நீதி.மொழி 16:9.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைபேசியின் ஆபத்துக்கள்

**"இனி எதிர்காலத்தில் ஒவ்வொருவரின் சட்டைப் பையிலும் ஒரு தந்திக் கருவி இருக்கும்"**

அருட்சகோதரி . R. அந்தோணிப்பிள்ளை H.C
வெளிமட

1930 களில் இப்புரட்சிக் கருத்தை முன் வைத்து வெளிப்படுத்திய தூர நோக்காளர் யார் தெரியுமா? யாரோ ஒரு ஐரோப்பிய நாட்டு அறிஞர் என்று யாரும் நினைத்து விடக்கூடாது அவர் தான் தந்தை பெரியார் என்னும் தத்துவ மேதை. தனது தொலைநோக்கு பார்வையோடு இயல்பாக வெளிப்படுத்திய உண்மையான கருத்தாகும்.

ஏறத்தாழ எண்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு யாரும் சிந்திக்க முடியாத கோணத்தில் சிந்தித்து அவர் குறிப்பிட்ட அந்த தந்திக் கருவி தான் இன்று எல்லோருடைய கைகளிலும் விதம்விதமாக தவழ்ந்து கொண்டிருக்கின்ற அலைபேசியாகும். இன்று உலக மக்கள் தொகையை விட இரண்டு மடங்கு அலைபேசிகள் மக்களின் பாவனையில் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

அலைபேசியின் பாவனைகள் நல்லதா? கெட்டதா?

அலைபேசிகளை முறையாக பயன் படுத்தினால் பல நன்மைகள் கிடைக்கின்றன,.அதை தவறாக பயன் படுத்தினால் மனிதத்துவத்தையே மாற்றிவிடும். பல அறிவியலாளரும், ஆர்வலர்களும், சமய தொண்டர்களும் அலைபேசியின் பாவனையால் ஏற்படும் ஆபத்துக்கள், தீமைகள் பற்றி தொடர்ந்து விழிப்புணர்வு செய்து வருகின்றனர்.

அலைபேசி பாவனையில் ஏற்படும் நன்மைகளை விட ஏற்படும் ஆபத்துக்களே அதிகம் என்று இவர்கள் எச்சரித்து வருகிறார்கள். அலைபேசியை அதிகம் பயன்படுத்துவது உயிருக்கே பெரும் ஆபத்து என்ற உண்மையை நம்புவது கொஞ்சம் கடினம் தான். அலைபேசியை அளவின்றி பாவிக்கும் யாவரும் சாவை உடனே சந்திப்பதில்லை. ஆனால் பல நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்பதை பல ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன. குறிப்பாக அலைபேசி வெளியேற்றும் மின்காந்த அலைகள் (Electro Magnetic Frequencies) லுக்கேமியா என்னும் இரத்தப்புற்று நோய், தோல் புற்று நோய்கள் , வலிப்பு நோய் மற்றும் மூளை பாதிப்பு போன்ற நோய்களை ஏற்படுத்தும் என்பதை மருத்துவ நிபுணர்கள் தொடர்ந்தும் எச்சரித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

அறிவியல் தளத்திலிருந்து சற்று சமூகத்தளத்துக்கு வந்தால் இன்னும் பல சவால்களைச் சந்திக்கின்றோம். இவற்றுக்கு ஆய்வுகளோ அறிக்கைகளோ தேவை - யில்லை. ஒவ்வொருவருடைய அன்றாட அனுபவங்களே இந்த உண்மையை உறுதிப் படுத்துகின்றன. ஏராளமான நேரங்கள் வீண்விரயம் செய்யப்படுவதைக் காண்கின்றோம். குறிப்பாக இளையோர், மாணவர்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டிய தங்கள் பொன்னான நேரத்தை வீணாக்குகின்றார்கள். அவசியமான பணிகளுக்கு அலைபேசியைப் பயன் படுத்துவதை விட பொழுது போக்கிற்கும் அநாவசியத் தேவைகளுக்குமே இன்று அலைபேசியில் அதிக நேரம் செலவாக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அலைபேசியின் தாக்கம்

அலைபேசியில் அதிகம் பேசப்பேச பணம் அலையாகக் கரைகின்றது. அலைபேசியின் செலவு அவசியமற்ற செலவு என்பதை பெரும்பாலானவர்கள் உணராத அளவுக்கு அலைபேசிப் பைத்தியம் பலரை ஆட்கொண்டு இருக்கிறது. பல நாடுகளில் அலைபேசியைப் பயன்படுத்துவதை தடைசெய்யவேண்டுமென்ற கோரிக்கை வலுவடைந்து வருகின்றது. அதிகமான மாணவர்கள் படித்துப் பயன் பெறும் நேரங்ளை வீடுகளிலும் வீதிகளிலும் நின்று அலைபேசியில் செலவளித்து தமது முழுக்கவனத்தையும் இழந்து வருவதை எம் கண்களால் காண்கின்றோம். அதுமட்டுமல்லாமல் அதிகளவு அலைபேசிப் பாவனை மூளையின் நரம்புகளையும் நினைவாற்றலையும் பாதிக்கின்றது என்பதை பல மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். எனவே மாணவர்கள் முக்கியமாக அலைபேசியைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் .

மது, போதைபொருள் போலவே அலைப்பேசிப் பயன்பாடும் ஓர் அடிமைப் பழக்கமாக மாறி வருகின்றது. அலைபேசி இல்லாமல் வாழ்க்கையில்லை நாகரீகம் இல்லை என்ற நிலைமைக்கு இன்றைய சமூகம் மாறிக் கொண்டு வருகின்றது. வீதிகள், பேருந்து நிலையம் ,வைத்தியசாலைகள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், கருத்தரங்குகள் போன்ற பொது இடங்களிலும் சக மனிதர்கள் பற்றி சிறிது கூட கவலையின்றி வெட்டிப் பேச்சு பேசி அனைவரையும் நிலைதடுமாறச்செய்யும் நாகரீகமற்ற தன்மை எங்கும் பரவிவருகின்றது. இதனால்தான் சில பொது இடங்களில் அலைபேசியை அணைத்துவிடுங்கள் என்று அறிவிப்புச் செய்யும் அவல நிலை இருக்கின்றது.

உயிருக்காக, அவசரதேவைகளுக்கு பயணநேரத்தில் அலைபேசியின் பயன்பாடுகள் இருந்தாலும் அதே அலைபேசி பல தீயசெயல்களுக்கும் பயன் படுவதை நினைத்து பலர் அச்சம் கொள்கிறார்கள். கொலை, கொள்ளை, மிரட்டல் போன்ற சமூக தீமைகளை நிறைவேற்றவும் பலர் பயன்படுத்துகிறார்கள். இன்னும் சமூகச்சீர்கேடு மட்டுமல்லாது பலர் தமது ஆன்மீகத்தையும் சீர்குலைக்கின்றனர் என்று பல ஆன்மீக வாதிகள் குறைசொல்லிக் கவலையடைகின்றனர். குடும்பங்களிலும் குழுக்களிலும் உறவை வளர்த்து அன்பை பரிமாறும் நேரங்கள் குறைகின்றன. அலைபேசியில் அலட்டும் நேரங்களை அதிகரித்து எம் வாழ்வையும் பண்பாட்டினையும் பாழாக்காமல் நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்போம்.

<u>சில ஆலோசனைகள்</u>



- <u>அறவே நிறுத்தலாம்</u> :- *அலைபேசியே இல்லாமலும் நிறைவான வாழ்வு வாழ முடியும் என்று எண்பிக்கின்றனர் கொள்கைப்பிடிப்புள்ள சிலர். மனம் இருந்தால் இடமுண்டு.*
- <u>நேரக்குறைப்பு</u> :- *கண்டிப்பாக ஒரு நாளில் எவ்வளவு நிமிடங்கள் அலைபேசியில் பேசுகின்றோம் என்பதை கணக்கிட்டு அதை குறைத்துக்கொள்ளலாம்.*
- <u>வாரம் ஒரு நாள் விடுமுறை</u> :- *வாரத்தில் ஒரு நாளை தேர்வு செய்து அந்த நாள் முழுவதும் அலைபேசிக்கு ஓய்வு கொடுப்பது நல்லதொரு செயலாகும்.*

நான் மாறினால் சமூகம் மாறும் என்ற மனப்பான்மையுடன் ஒவ்வொருவரும் செயற்பட்டு எம் எதிர்கால சந்ததியைப்பாதுகாப்போம்.

# போதையிலிருந்து



திரு.அ.ஜெயநாதன்
தொழில் வழிகாட்டல் ஆலோசனை
உத்தியோகத்தர்
வலயக்கல்வி அலுவலகம் மட்டக்களப்பு




மேலோட்டமாக இது நகைச்சுவையாக இருந்தாலும் உள சமூக ஆர்வலர்கள் என்ற வகிபங்குடன் குறிப்பிட்ட பட்டதாரியின் அறிவு திறன் மனப்பாங்கை நோக்கும் போது எமது சமூகத்தின் குறிப்பாக புத்தி ஜீவிகள் என தங்களை அடையாளமிட்டு கொள்பவர்களின் நிலைமையை இது எமக்கு அடிக்கோடிட்டு காட்டுகிறது. வேலையில்லாப் பிரச்சினைக்கு நம்மைநாமே அழித்துக் கொள்வது தீர்வுத்தானா? இதையா பல்கலைக்கழகம் கற்றுக்கொடுத்தது?

பாடசாலை (இணைந்து செயற்பட உகந்த சூழல் இல்லாமை)

தமக்கு கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை வலிந்து மாணவர்களுக்குள் புகுத்த எத்தனிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் தனித்துவங்களை மதிக்காது மிதித்து விடுகின்றனர்.

பேராசிரியர் டற் என்பவர் எழுதியுள்ள Psychological Foundation of Education என்ற நூலில் பொருத்தப்பாடற்ற ஆசிரியர்களை நான்குவகையாக பிரித்துள்ளார்.

1.கடும் போக்குடையோர்: மாணவர்களை எப்போதும் குறை கூறிமிரட்டிக் கொண்டு உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் தொல்லை கொடுக்கும் ஆசிரியர்கள்

2.தற்புகழ்ச்சி பாடுவோர்:தன்னைத்தானே புகழ்ந்துகொண்டு தான் படித்த படிப்பையெல்லாம் கூறிக்கொண்டு பிரபலங்களுடன் எல்லாம் தனக்கு தொடர்புகள் இருப்பதாக சொல்லி மாணவர்கள் மனதில் தாழ்வுமனப்பாங்கை விதைத்துவிடும் ஆசிரியர்கள்

3.அண்டிப்பிழைப்போர்: வகுப்பிலுள்ள சில வல்லமை மிக்க மாணவர்களின் ஆதரவிலே தங்கியிருக்கும் வலுக்குறைந்த ஆசிரியர்கள்

தொடர்ச்சி.........

4.போலி உளவியலறிஞர்கள்: உளவியல் அறிவுத் தெளிவு என்பதே இல்லை ஆனால் உளவியல் மேதாவிகளாக காட்டிக்கொண்டு பயிற்சிகளில் பெற்ற உளவியலறிவை மாணவர்களுடனான அணுகு முறையில் துளிகூட பிரயோகிக்காத ஆசிரியர்கள்.

இவர்களால் எவ்வாறு கல்விப்புலத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

வீடு (சந்ததி இடைவெளி)

இந்த ஆக்கத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது சமூக வலைத்தளம் ஒன்றில் 09.12.2017 அன்று தரவேற்றம் செய்யப்பட்ட செய்தியை பகிர்ந்து கொள்கிறேன்.

தமிழ் பிரதேசத்திலுள்ள பிரபலபாடசாலை மாணவன் ஒருவன் தனது அறையை பூட்டிகொண்டு படிப்பது வழக்கம். தந்தை அரச அதிகாரி தாய் ஆசிரியை அன்றைய தினம் வித்தியாசமான மணத்தை உணர்ந்த தந்தை கதவைதிறந்து பார்த்து மகனின் புத்தகங்களை சோதனையிட பீடித் துண்டுகளும் கஞ்சாதூளும் புத்தகங்களுக்குள் இருந்தது. இது என்ன என தந்தை கேட்க மகன் தெரியாது என பதில் சொல்ல உடனே கோபமடைந்த தந்தை தும்புத் தடியால் மகனை தாக்கினார். கை உடைந்த நிலையில் மகனை அயலவர்கள் வைத்தியசாலையில் அனுமதித்தார்கள் தடுக்கச் சென்ற மகளும் மனைவியும் தந்தையால் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள் பின்னர் தந்தை

அவமானத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்ய முயன்றார் அவரையும் அயலவர்கள் காப்பாற்றி விட்டார்கள். வீடுகளில் காணப்படும் குடும்ப கட்டமைப்புக்களில் சந்ததி இடைவெளி பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவு உரையாடல் தீர்ப்பிடல்களாகவே காணப்படுகின்றன இந்நிலை முரண்பாட்டுச் சூழலை ஏற்படுத்தி தவறான சவால்விடும் நடத்தைகளுக்கு வித்திடுகிறது.

போதைப்பொருள் கொம்பனிகளின் விளம்பர தந்திரோபாயங்கள்

இன்று விளம்பர தந்திரோபாயங்கள் எமது இளைஞர்களின் பகுத்தறிவுச் சிந்தனையை சிதறடிக்கும் வகையில் போதைப்பொருள் கொம்பனிகள் மேற்கொள்கின்றன

மாரி திரைப்படத்தில் தனுஸ் சுமார் 20 நிமிடங்கள் சிகரட் புகைக்கும் காட்சியில் தோன்றுகிறார். இதற்கு தயாரிப்பாளருக்கும் தனுசுக்கும் டொபேக்கா கொம்பனி பெருந்தொகை பணத்தை வழங்கியிருக்கிறது.

இன்று கொம்பனிகள் சமூக சேவை என்ற பெயரில் சமூகத்துக்குள் ஊடுருவும் தந்திரோபாயங்களை அவதானிக்குமிடத்து

கிளிநொச்சி பொலிஸ் நிலையம், மாங்குளம் பொலிஸ் நிலையம், மாங்குளம் புகையிரதப்பாதை, வீரவில பொலிஸ் நிலையம் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்திருத்தல்.

எலகரப் பகுதியில் மரணசங்கத்திற்குக் கதிரைகள் கொடுத்திருத்தல்

கிளிநொச்சியில் 1000 குடும்பங்களைத் தெரிவு செய்து நிலையான விவசாய அபிவிருத்தி செயற்திட்டத்தை மேற்கொண்டமை.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து 100 விவசாயக் கிணறுகள் அமைக்கும் திட்டத்தை ஏற்படுத்தியிருந்தமை.

போன்றவற்றை கூறலாம் ஏன் இதை அரசு செய்ய முடியாதா?

இதை விட Tசேட் ,தொப்பி Pen Drive போன்றவற்றில் போதைப் பொருள்களின் பெயர்களை அச்சிடுதல் போன்ற விளம்பரங்களின் மூலம் இளைஞர்களை கொம்பனிகள் வளைத்துப் போடுகின்றன. இது தொடர்பாக நாம் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.



நகர பாடசாலைகளிலும் அதனையண்டிய பாடசாலைகளிலும் போதைப் பொருள் பாவனை மாணவர்கள் மத்தியில் ஊடுருவியுள்ளதை அறிகிறோம். ஓரிரு பாடசாலைகளில் போதைப் பொருள் வைத்திருப்பவர்கள் கையும் மெய்யுமாக பிடிபட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டதை அறிகிறோம். அதற்கு பிள்ளையின் சூழலில் போதைப் பொருள்கள் தாராளமாக கிடைக்கக் கூடிய ஏது நிலை உள்ளதே காரணம். அதை விட பிறந்த நாள் கொண்டாட்டம் என்ற பெயரில் உயர்தர வகுப்பு மாணவர்கள் பெற்றோரின் பணத்தில் பியரும் குடித்து கொத்துரொட்டியும் சாப்பிடும் பழக்கம் வெகுவாக பரவியுள்ளதை பெற்றோர்கள் சற்று கவனிக்க வேண்டும். எமது சமூகம், எமது பிள்ளையின் எதிர்காலம், எமது பிள்ளையின் கல்வி என மிகுந்த அக்கறையுடன் சிந்தித்துச் செயற்பட வேண்டிய கட்டாயம் எமக்குள்ளது. நமது பிள்ளைகளுடன் அன்பு காட்ட வேண்டியது நியாயம் தான் ஆனால் அவர்கள் கூடாத சகபாடிகளின் பழக்கத்தால் எம்மை விட்டுத் தொலைந்து போவதை அனுமதிக்கலாமா? சிந்தியுங்கள்

எனவே போதைப்பொருள் பாவனையினை நாம் ஒழிக்கவோ தடுக்கவோ முயற்சிப்பதானால் சமூகம் பாடசாலை வீடு என்ற மூன்று தளங்களிலும் பொருத்தமான முறையில் செயற்பட்டால் மட்டுமே இதை சாத்தியமாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

## கல்வி வழி நில்



நாலறிந்து காசினியை வாழ வைக்கும்
நோன்புடனே மாணவர்கள் பயில வேண்டும்
வாலறுந்த பட்டமென அலைதான் மோதின்
வருங்காலம் உண்மையிலே இருளாய்ப் போகும் !
சீலமுடன் செய்கைகளில் புனிதம் சேர்ந்தால்
சீராகும் நல்வாழ்வில் சிறப்பே சேரும்
காலத்தைப் பொன்போன்று மதித்து நாளும்
கற்றபடி வாழ்ந்தாலே மேன்மை கூடும் !

முதறிஞர் வரலாற்றைத் தேர்ந்தே நாளும்
முன்னேறும் படிக்கல்லாய் அவற்றையேற்று,
தீதறியா விதமுலகில் பயணித்திட்டால்
தீங்குகளோ அண்டாது தேசம் வாழ்த்தும் !
கோதாக வாழாமல் கனிகள் தன்னைக்-
கொடுக்கின்ற விருட்சமென மாற்றம் பெற்று
தோதாக வாழுவதே தூய வாழ்க்கை,
தொடரும் நாள் அத்தனையும் வசந்தமாகும் !

கொள்ளையினைக் குறிக்கோளைக் குலைக்கும் செய்கை
கொள்ளாது உலகினிலே வாழக் கற்றால்
உள்ளுமுமை இவ்வுலகம் தலைமை தாங்கும்
உத்தமராய் கட்டாயம் ஏற்றுக் கொள்ளும் !
கள்ளமிலா அன்போடும் உயிர்கள் மீது -
கருணையதும் குன்றாமல் வாழ்ந்தால்: நேர்மை
உள்ளவரே இவனென்று உலகம் போற்றும்,
உயரியதாம் கல்விவழி தனிலே நிற்பாய் !

அ.கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு
கிண்ணியா

## எல்லை ஏது?

தம்பி தம்பி வாடா, அறிவியலைப் படிப்பாய்,
தமிழ் படிப்பம் வாடா! ஆம் புவியைப் படிப்பாய்!
நம்பியிருக்கிறோம், பொறியியலைப் படிப்பாய்,
நன்கு படிப்பாய் நீ! புதுமைகளைப் படிப்பாய்!



நலவியலை படிப்பாய், உயிரியலைப் படிப்பாய்.
நாட்டியலைப் படிப்பாய்! உண்மைகளைப் படிப்பாய்!
கலையியலைப் படிப்பாய், பயிரியலைப் படிப்பாய்.
கணிதமதைப் படிப்பாய்! படிப்புக்கெல்லை ஏது?

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு-கிண்ணியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோர் ஓசை



ச.சந்திரகுமார்

(முத்தூர் நிலா)

சமூகமாற்றங்கள் மனிதவாழ்வையே விழித்துக் கொண்டிருக்கும் காலகட்டம், கூட்டுறவும் கூடிவாழும் போக்கும் மனிதத்துவத்தையே கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கின்றன. நாம் பிறந்தோம் வாழ்ந்தோம் என்பவற்றிற்கப்பால் நாம் எதனை அறிந்துள்ளோம்? நாம் எதனை படைத்திருக்கின்றோம்? எவ்வகை புத்தாக்க சிந்தனைகளை விதைத்திருக்கின்றோம்? அல்லது முயற்சித்திருக்கின்றோம்? என்பவைகளை உற்றுநோக்க வேண்டிய நிலைமையில் இன்று அனைவரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் எவருக்குமில்லை என்பது தெளிவு.

ஆயினும் இளைஞர்களின் எண்ணப் பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும் இன்றைய சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை.

சாதனையின் உச்சிக்கே சென்று விட்டோம் என்ற மனநிலையுடன் எதனையுமே கண்டுகொள்ளாது வாழ்ந்திருக்கும் மனோநிலை தான் அதிகமான இளையோரின் போக்காகும். அதனையும் தாண்டி எமக்கும் சமூக அக்கறை உள்ளது.

*மாற்றத்தின் விதைகள் இளைமையே!!!*
*சுவடும் நீயே இளைஞனே!!!*
*சுபீட்சமும் நீயே இளைஞனே!!!*
*களியும் நீயே இளைஞனே!!!*
*கைவிளைஞனும் நீயே இளைஞனே!!!*

**"எதிர்காலத் தலைமுறையின் அடிநாதமும் அத்திவாரமும் நாங்களே என்ற நிலைப்பாட்டை தம்மகப்படுத்திய இளைஞர்கள் பலர் நம்மிடையே தான் பரந்துவாழ்ந்தார்கள். ஏன் இன்றும் வாழ்ந்து கொண்டும் இருக்கின்றார்கள்".**

அவர்களால் உருவாக்கப்பட்ட மற்றும் அடையாளப்படுத்தப்பட்ட பலவற்றை இன்றும் நாம் பயன்படுத்துகின்றோம். அதற்கும் மேலாக மேடைகளிலும் பேச்சுக்களிலும் முழக்கமிடுகின்றோம் அத்துடன் நில்லாது ஆக்கங்களிலும் வடிக்கின்றோம். பேசுகின்றோம் என்பதற்கு மாற்றுக்கருத்துக்கள் குறைவுதான்.

எவ்வாறாயினும் நான் எதனைச் சாதித்தேன்? எனது அடுத்த சந்ததிக்கு எதனை விட்டுச் செல்லப் போகின்றேன் என்றளவில் தற்கால இளைஞர்கள் இன்னும் மயக்க நிலையில் தான் இருக்கின்றனர் என்பது வெள்ளிடைமலை. மறுபுறத்தில் இளைஞர்கள் பற்றிய அனுபவசாலிகளின் நோக்கும் சிந்தனையும் விமர்சனங்களும் அறிக்கைகளும் நாளுக்குநாள் வருவதும் தவிர்க்க முடியாததுமாகின்றன.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகைச் சந்தேகங்களை அழிக்க வேண்டாமா இளைஞர்களே! அதற்கான செயற்பாடுகளை திட்டமிட வேண்டாமா? அவற்றிற்கு செம்மையான செயல் வடிவம் கொடுத்து புதிய பரிணாமத்தை வளர்க்க வேண்டாமா? எனப் பரவலாக சிந்தித்த இளையோர் பலர். அவர்களில் இளைஞனே! நீ புரட்சிகரமான சிந்தனையாளன் எனப் பலவகைக் கேள்விக் கணைகளைத் தமக்குள் தொடுத்த மாற்றுச் சிந்தனைகொண்ட இளைஞர்கள் அரசியலில் பொதுவுடமைத்தத்துவம் அனைவ - ருக்கும் உரித்தானது. என்பதனை நடந்து முடிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் களமிறங்கி தமது சமூக உரிமைகளை நிலைநாட்டவும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்தி -க்குமான எண்ணப் பாடுகளையும் அக்கறை களையும் வெளிக்காட்டியமை கண்கூடானது.

இது நாடு முழுவதும் காணப்பட்டது. அடிப்படையில் இளைஞர்கள் தவறானவர்கள், அனுபவமற்றவர்கள், இவர்கள் அரசியல் தார்ப்பரியங்களை அறியாதவர்கள், இவர்களால் எதனையும் கொண்டு நடாத்த முடியாது என்ற பொதுப்படையான தன்மைமாறிப் பலகட்சிகள் இளைஞர்களை முன்னிறுத்தியமையை நாம் கண்டோம்.

இது எதனைக் காட்டுகின்றதென்றால் இளைஞர்கள் தான் ஆற்றல்மிக்கவர்கள். சிந்தனையின் புரட்சியாளர்கள், தொலைநோக்கு கொண்டவர்கள், இலகுவில் ஏமாற்றப்பட முடியாதவர்கள். என்பவைகள் உலகத்தினால் அங்கீகரிக்கப்பட்டதாகும். ஆயினும் முடிவடைந்த தேர்தல் குறிப்பாக அரசியலில் ஆழப்பதிந்தவர்களை இன்னும் அறிந்து கொள்ளச் செய்துள்ளது என்பது தெட்டத்தெளிவு.

மறுபுறத்தில் இளைஞர்கள் அற்ற குடும்ப, சமூக,பிரதேச,ஏன் நாட்டின் அபிவிருத்திகளும் வீணானது என்பதுடன் அவை அடைய முடியாது போய்விடும் என்பதில் அனைவரின் உடன் பாட்டையும் எடுத்தியம்பியுள்ளது.

மக்களின் இறைமையானது மக்களால் மக்களை ஆளும் தலைவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளதே தவிர அவை மழுங்கழிக்கப்படவும் மறுக்கவுமில்லை என்பதனை அனைவரும் மனதில் கொள்ளுதல் வேண்டும்.

எனவே மக்களால் கொடுக்கப்பட்ட தத்துவங்கள் மக்களின் நன்மைக்கே பயன்படுத்தப்படல் வேண்டும். மாறாக நம்பிக்கை கொண்டமக்களுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களாகிய நீங்கள் செயற்படாது. தமது இறைமைகளையும் அபிவிருத்திகளையும் அரசியலின் பொதுவுடமைத் தத்துவமாக தமது சுயநிர்ணயங்களைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவுமே குடிமக்களால் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. என்பதனை மறவாது செயற்படுவீர்கள் என்பதில் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

பட்டமும் பதவிகளும் மனிதவாழ்வின் சிறுபகுதிகள்தான். செயலாற்றியவர்கள் அல்லது செயல்பட்டவர்கள் வெற்றி கொண்டனரென்பது வரலாற்றுப் பாடமும் மெய்மையுமாகும்.

**வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும்**
**நெல்லுயர குடியுயரும் குடியுயரக் கோனுயர்வான்**

அப்போது படித்த ஔவையின் வரிகள் . ஆனால் இன்றுஅதன் போக்கு? இதற்கும் பதில் மக்களின் அங்கீகாரம் பெற்றவர்களே கூறுதல் வேண்டும். அதுமட்டுமல்லாது பொறுப்புக் கூறவேண்டியவர்களும் அவர்களே!



*அடுத்த இதழில் வேறு விடயப்பரப்புடன்*

*சந்திக்கின்றேன். ..............*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறையுரையிலிருந்து....

திருகோணமலை குவாடலூப்பே அன்னை ஆலயப் பங்குத்தந்தை
அருட்பணி.B.ஜெயபாலன் OMI அவர்கள் ஆற்றிய மறையுரையின் தொகுப்பு

# நித்தியமான உணவு



ஆண்டவர் நற்கருணை வடிவில் பிரசன்னமாகி இருக்கிறார். அனுதின உணவாகும் நற்கருணையை பற்றிச் சிந்திப்போம். ஒரு திருமணவீடு நடந்தது. அங்கே ஒருவர் மாறி மாறி இரண்டு பந்திகளிலும் இருந்து கொண்டிருந்தார். இரண்டாவது பந்தி முடிந்ததும் அவருக்கு இன்னும் சாப்பிட வேண்டும் போல் இருந்தது. சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே வயிற்று வலி ஏற்பட்டு விட்டது. வைத்தியசாலையும் அருகிலில்லை.... என்ன செய்வதென்றே தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான். அக்கம் பக்கத்திலிருந்தவர்களிடமும் சென்று கேட்டான். என்னால் தாங்க முடியவில்லை... வயிற்று வலி ஏற்பட்டு விட்டதே என்று அழுதான். அங்கே வயது முதிர்ந்தவரிடம் மற்றவர்கள் அனுப்பினர். அவருக்கு வைத்தியமும் சற்று தெரியும். அவரும் அவனைப்பார்த்த 'தம்பி! இந்த பந்திக்கு வெளியே வா..' என்றார். இவனும் மெல்ல மெல்ல நடந்து அங்கே சென்ற போது பெரியவர் கூறினார். 'உன்னை வைத்திய சாலைக்கெல்லாம் கொண்டு போக முடியாது உடனடியாக ஒரு வழிதான் உள்ளது. நீ உடனே வாந்தி எடுக்க வேண்டும்.

அவன் 'ஐயையோ என்னால் அது முடியாது...' என்றான். உடனடியாக சுகம் கிடைக்க நீ உன் விரல்களை வாய்க்குள் விட்டாவது வாந்தியெடு என்றார். அதற்கு அவன் 'சும்மா போங்கய்யா... ரெண்டு விரல் விட இடமிருந்தால் நான் வாழைப்பழம் இரண்டு சாப்பிட்டிருப்பேனே' என்றான்.

உணவும் தப்பல்ல உணவுப் பொருட்களும் தப்பல்ல. தப்பானவை எவை? தப்பாக சமைப்பதும் தப்பாக சாப்பிடுவதும் தான் தவறு. ஒருவன் சொன்னான் நான் இருந்தது இக்கரை... போகவேண்டியது அக்கரை... உடம்பிலுள்ளது சக்கரை... எனக்கு இல்லை அக்கறை.

எமது செபங்களில் கூட சாதாரண உணவு என்று 'இந்த உணவை எங்களுக்கு தந்தருளும். இந்த உணவே விருந்தாக இருந்தால் அனுதினமும் எங்களுக்கு தந்தருளும்' எந்தநேரமும் இவ்வாறான விருந்தினை உண்ண வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

அன்றைய காலத்தில் ஒரு பயணம் செய்பவர்கள் உடுப்பு, சப்பு, சோப்பு, பேர்ஸ் என்பவற்றையெல்லாம் தேடி எடுத்துக் கொண்டே பயணம் செய்வார்கள்.

இன்றைய காலத்தில் பயணம் செய்பவர்கள் மாத்திரை பொட்டலத்தையும் போனையும் மறக்காமல் எடுத்துச் செல்வார்கள். போனில் அம்மாவுக்கு மகள் அடிக்கடி ஞாபகப்படுத்திவிடுவாள் 'அம்மா.. சாப்பிட்டு விட்டாயா? மறக்காமல் சாப்பிட்ட பின் இரண்டு....இரண்டு..இரண்டு என மாத்திரைகளை மட்டுமே போட மறவாதே' இவ்வாறே அன்பானவர்களே இன்றைய நாளில் அரைவாசி நாள் ஆஸ்பத்திரியிலும் அரைவாசி நாள் ஆலயங்களில் கண்ணீரோடும் இருக்கிறார்கள். இந்த நிலைக்கு காரணம் அழிந்து போகும் உணவுக்காக உழைப்பதும்...அழிந்து போகும் உடல் தேடி அலைவது தான். இன்று அழியாத உணவைப்பற்றி சிந்திக்க அழைக்கிறேன்.

பழைய ஏற்பாட்டில் உணவைப்பற்றி பல அதிசயங்கள் ஆங்காங்கே நடைபெற்றதை காண்கிறோம். அது புதிய ஏற்பாட்டிலே ஆண்டவர் யேசுவிலே நிறைவு பெறுகிறது.

1அரசராகமம் 17:8-16 வரை ஆண்டவருடைய வாக்கை எலியாவுக்கு கட்டளையிடுகிறார் 'போ...சீதோன் பகுதியிலிருக்கும் சாரிபாத்துக்குப் போய் அங்கே தங்கியிரு அங்கு உனக்கு உணவு அளிக்குமாறு ஒரு கைம்பெண்ணுக்குக் கட்டளையிட்டிருக்கின்றேன்' என்றார்.



10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறையுரையிலிருந்து....

எலியா புறப்பட்டு சாரிபாத்துக்குப் போனார். அங்கே ஒரு கைம் பெண் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். அவர் அவளை அழைத்து "ஒரு பாத்திரத்தில் எனக்கு குடிக்கத் தண்ணீர் கொண்டு வா" என்றார். தொடர்ந்து "எனக்கு கொஞ்சம் அப்பமும் கையோடு கொண்டு வா" என்றார். அதற்கு அவள் 'வாழும் உம் கடவுளாகிய ஆண்டவர் மேல் ஆணை என்னிடம் அப்பம் ஏதும் இல்லை: பானையில் கையளவு மாவும் கலயத்தில் சிறிதளவு எண்ணெயுமே உள்ளன. அதை நானும் என் மகனும் சாப்பிடுவோம். அதன் பின் சாகத்தான் வேண்டும்" என்றாள். எலியா அவளிடம் "இஸ்ரயேல் கடவுளாகிய ஆண்டவர் உரைப்பது இதுவே நாட்டில் ஆண்டவர் மழை பெய்யச் செய்யும் நாள் வரை பானையிலுள்ள மாவு தீராது: கலயத்திலுள்ள எண்ணெயும் குறையாது" என்றார். அவர் கூறிய படியே நடந்தது..

அரசராகமம் 19:4-8 பகுதியில் இறைவாக்கினர் எலியா பாலைநிலத்தில் இஸ்ரயேலர்களுக்கு பயந்து ஒரு நாள் முழுவதும் பயணம் செய்தார். ஒரு சூரைச் செடியின் கீழ் அமர்ந்து தான் சாக வேண்டும் என பின்வருமாறு மன்றாடினார். "ஆண்டவரே நான் வாழ்ந்தது போதும்: என் உயிரை எடுத்துக்கொள்ளும். நான் என் மூதாதயரை விட நல்லவன் அல்ல." பின்னர் அச்சூரை செடியின் சீழ் படுத்துறங்கினார். ஒரு வானதூதர் தட்டி எழுப்பி "எழுந்து சாப்பிடு" என்றார். அவர் கண் விழித்து பார்க்கையில் தணலில் சுட்ட ஒரு அப்பமும் ஒரு குவளையில் தண்ணீரும் இருக்கக் கண்டார். அவற்றை உண்டு பருகிய பின் திரும்பவும் படுத்துக் கொண்டார். வானதூதர் மீண்டும் எழுப்பி 'எழுந்து சாப்பிடு ஏனெனில் நீ நீண்ட பயணம் செய்ய வேண்டும் என்றார். அப்போது அவர் எழுந்து பருகினார். அவ்வுணவினால் வலிமையடைந்து அவர் நாற்பது பகலும் நாற்பது இரவும் நடந்து, ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார்.

இன்னும் 2ம் அரசராகமம் 4ம் அதிகாரம் 42-44 வரையுள்ள வாக்கியங்களில் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது. பாகால் சாலிசாவைச் சேர்ந்த ஒரு மனிதர் புது தானியத்தில் செய்யப்பட்ட இருபது வாற்கோதுமை அப்பங்களையும் கோணிப்பையில் முற்றிய தானியக் கதிர்களையும் கடவுளின் அடியவரிடம் கொண்டு வந்தார். எலிசா. "மக்களுக்கு உண்ண கொடு" என்றார். இதை நூறு பேருக்கு உண்ணக் கொடுத்து ஆண்டவரின் வாக்கின் படி மீதியும் இருந்தது.

இவ்வாறு ஆங்காங்கே பழைய ஏற்பாட்டில் உணவைப்பற்றி சொல்லப்பட்டது. ஏனென்றால் வல்லமையுள்ள ஆண்டவராகிய யேசு தன்னுடைய உடலை அப்பமாகப் பார்க்கப்போகின்றார். அதிலே தான் நிறைவு பெறப்போகின்றது. இந்த உணவே அழியாத உணவு. புதிய ஏற்பாட்டில் யேசு தமது உடலை அப்பமாக மாற்றுவதற்கு முன்பாக இரண்டு புதுமைகள் செய்கின்றார்.

யோவான் 6:1-18 பகுதியிலே இயேசு மலைமேல் ஏறி தம் சீடர்களோடு அமர்ந்தார். பெருந்திரளான மக்கள் அவரை பின் தொடர்ந்தனர். "இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்" என்று பிலிப்பிடம் கேட்டார். பிலிப்பு மறு மொழியாக 'இருநூறு தெனாரியம் அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறு துண்டும் இருக்காதே" என்றார். அப்போது அந்திரேயா 'இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான் அவனிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன. இவை போதாதே' என்றார். இயேசு 'மக்களை அமரச்செய்யுங்கள்' என்றார். அங்கே ஐயாயிரம் பேருக்கு மேல் இருந்தார்கள்.'அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோர்க்கு கொடுத்தார். எஞ்சிய துண்டுகளை பன்னிரெண்டு கூடைகளில் நிரப்பினார்கள்.

இரண்டாவதாக யோவான் நற்செய்தி 2:16 என்ற பகுதியில் கானாவூர் திருமணத்தில் திராட்சை ரசம் தீர்ந்து போனாலும் நீரை திராட்சை ரசமாக்கிய அதிசயத்தை நிகழ்த்தினார்.

ஆனால் இந்த அதிசயங்களை மக்கள் புரிந்து கொண்டார்களா? இல்லவே இல்லை. ஆனால் மக்கள் வயிறார உண்டார்கள் மறு நாளும் இயேசுவைத் தேடி ஓடினார்கள். அலைமோதினார்கள் யேசுவைக் கண்டீர்களா? என்று விசாரிக்கிறார்கள். ஏன்? மாறாக நேற்று வயிறார உண்டார்கள். அது போல் இன்றும் உண்ண வேண்டும் என்பதற்காகத் தான். ஒரு வழியாக தேடி அலைந்து கப்பர்நகூரில் யேசுவைக் கண்டு பிடிக்கிறார்கள். அப்போது அவரிடம் 'இன்றும் புதுமைகள் செய்வீர்களா? என்று கேட்கிறார்கள். யேசு அவர்களின் கேள்வியைப் புரிந்து கொண்டார். அப்போது அவர் "நீங்கள் அருளடையாளங்களைக் கண்டதாலல்ல, மாறாக வயிறார உண்டதால் என்னைத் தேடுகிறீர்கள். அழிந்து போகின்ற உணவுக்காக அலையாதீர்கள்.

அழியாத உணவு நிரந்தரமான உணவு என்னையும் உங்களையும் வாழ்வழிக்கின்ற புனிதமான உணவு அதை உட்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீட்டும் கடனும் நம்மவர்களைச் சீரழிக்கும்

அருட்திரு. அன்புராசா செபமாலை OMI
B.Th.(Rome), M.Phil (Ja? na).
Director, 'Amathikarankal'
Lebara Wellness Centre for
Amputees, Mankulam



தொடர்ச்சி..............

### சீட்டுக்களால் சீரழியும் நம்மவர்கள்

சேமிப்பு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கஸ்ரப்பட்டு ஓடியோடி உழைத்த பெரும்தொகைப் பணத்தை சீட்டுக்கட்டி இழுந்தவர்கள் அங்கு ஏராளம். ஏமாறுகிறவர்களின் பட்டியலும் ஏமாற்றுகிறவர்களின் பட்டியிலும் ஒன்றையொன்று மிஞ்சியதாகவே விரிந்து செல்கிறது. இரண்டு, மூன்று சீட்டுக்களை ஒரே நேரத்தில் தொடங்கி, இரண்டு மூன்று மாதங்களில் பெற்ற பணத்தையெல்லாம் சுருட்டிக் கொண்டு வேறு நாடுகளுக்குக் குடும்பமாக ஓடிச் சென்று 'செற்றில்' ஆகியவர்கள் எண்ணிக்கையில் பெரிதாக இல்லாவிட்டாலும் இருக்கிறார்கள் என்பது உண்மை. ஐம்பது அறுபது பேரின் வியர்வையில் மாதக்கணக்கில் உழைத்த பணத்தினையே தாங்கள் சுருட்டிக்கொண்டு ஓடுகிறார்கள் என்ற ஒரு துளி மனக்கிலேசமும் இல்லாமல் இவ்வாறு செய்துவிடுகிறார்கள். இவ்வாறு அடுத்தவரின் பணத்தில் ஏமாற்று வாழ்க்கை நடத்திக்கொண்டு "நாங்கள் நல்ல வசதிகளோட இருக்கிறம்!" என்று சொல்லித் திரிகிற பேர்வழிகளும் உண்டு.

### நாணயத்துக்காக நாணயத்தை இழப்பவர்கள்!

நாணயத்திற்காக(பணத்திற்காக) நாணயத்தை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மவர்கள் புலம்பெயர் மண்ணிலும் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை எண்ணுகிறபோது இப்பேர்ப்பட்டவர்கள் திருந்துவதற்கான வழி இருக்கிறதா என்ற கேள்வியே மேலெழுந்து நிற்கிறது. இச்சீட்டுத் தொல்லையால் வாழ்க்கையைத் தொலைத்தவர்களில் நிறையப் பேர் 'வெளியில் சொன்னால் வெட்கம்! நினைத்தால் மனதில் துக்கம்!' என்று வெளியே சொல்ல முடியாமலும் மனதிற்குள் வைத்து ஆற்றமுடியாமலும் பெருந் தவளையைப் பிடித்த சிறு பாம்புபோல தவிக்கிறார்கள்.

இவ்வாறான நிலமையிலும் சீட்டுக்கட்டுதல் முன்பை விட இப்போது அதிகமாகவே இருக்கிறது என்கிற உறுதிசெய்யப்பட்ட அதிர்ச்சித் தகவலைக் கேட்கிறபோது தலை சுற்றுவதைத் தவிர்க்க முடியாது போகிறது! யார் என்ன செய்யமுடியும்? ஏமாளிகள் இருக்கின்ற வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் என்பது நிதர்சனமான உண்மையாகிறது.

இவ்விடயத்தில், சூடு வாங்கும் வரை பூனைகள் அடுப்பங்கரையை நாடத்தான் செய்யும். காரணம் சூடுவாங்கிய பூனை அடுப்பங்கரையை நாடாது என்கிறது முதுமொழி. பூனை சூடுகாண அடுப்பங்கரைக்குச் செல்லலாம். ஆனால், ஒருதடவை முறையான - சரியான சூடு வாங்கினால் மறுமுறை சூடு வாங்காது தன்னை தற்காத்துக்கொள்ளும் பாடத்தை மனிதனைப் பார்க்கப் பூனை தெரிந்து வைத்திருக்கிறது.

### கடன்பட்டவனையும் கவனமாகவே கையாளவேண்டும்!

முன்னைய காலங்களில் கைமாற்றாகவோ அல்லது கடனாகவோ பணம் பெற்றவர்கள் குறிப்பிட்ட தவணையில் அப்பணத்தை செலுத்தத் தவறின் கடன் கொடுத்தவரின் கண்களில் படாதவாறு கவனமாகத் திரிவார்கள். கடன் கொடுத்தவன் வீடு தேடி வந்தாலும் அப்பா வீட்டில் இருக்கக் கூடியதாகவே "அப்பா வெளியில!" என்று சொல்லி மனைவியோ பிள்ளைகளோ வந்தவரை அனுப்பிவிடுவார்கள். இந்நிலையில், பெற்ற கடனை கட்டிமுடித்த பின்பே தங்களது அடுத்த கட்ட நடவடிக்கைகளைப் பற்றிச் சிந்திப்பார்கள் கடன் வாங்கியவர்கள்.

ஆனால், இப்போதெல்லாம் கடன் வாங்கியவனைக் கடன் கொடுத்தவன் காண நேர்ந்தால், கடன் கொடுத்தவன் கௌரவமாகப் பேசப் பழக வேண்டியிருக்கிறது! காரணம் வாங்கிய கடனை தராமல் விட்டுவிடுவானோ! என்ற பயம் கடன் கொடுத்தவரை இக்காலத்தில் வெகுவாகப் பாதிக்கிறது.சிலவேளைகளில், கடன் வாங்கியவன் கதைக்காமல் பார்த்துவிட்டு,



10

ஏன் முறைத்துவிட்டுச் சென்றாலும், அந்த அசௌரியங்களை எல்லாம் பொருட்படுத்தாமல் கடன் கொடுத்தவன் சும்மா என்றாலும், "தம்பி, எப்பிடி இருக்கிறீங்க?" என்று மரியாதையோடும் வணக்கத்-தோடும் சில வார்த்தைகளில் ஏனும் அவனுடைய சுகத்தைப் பற்றி விசாரிக்கவேண்டி இருக்கிறது. காரணம், அவன் சுகமாக இருந்தால் தான் வாங்கிய காசு ஓரளவுக்கேனும் வந்துசேர வாய்ப்பிருக்கிறது என்பதை இக் காலத்தில் கடன் கொடுத்தவன் அறியாததா.

### சூடு, சுரணை, மானம், ரோசம் யாருக்குவேண்டும்!

இவ்வாறுதான் ஒருதடவை கடன் வாங்கியவன்கடன் கொடுத்தவனை மிக கடுமையான, மோசமான வார்த்தைகளில் திட்டித் தள்ளினான். பொதுவாக, ஒரு தீய, ஏற்றுக்கொள்ள முடியாத செயலை ஒருவன் செய்துவிட்டால், "உனக்கு! சூடு, சுரணை, மானம், வெட்கம், ரோசம் இருந்தால் இப்பிடிச் செய்வியா?" என்றுதானே கோபத்தில் பேசக் கேட்டிருப்போம். ஆனால், கடன் வாங்கிய நம்மவன் ஒருவன் இதே 'டயலொக்'கையே (உரையாடலையே) கொஞ்சம் தனக்கு ஏற்றால்போல மாற்றி, "உனக்கு! சூடு, சுரணை, மானம், வெட்கம், ரோசம் இருந்தா கு(கொ)டுத்த கடனை திருப்பிக் கேட்காதடா?" என்றானாம். எப்படி இருக்கிறது இந்த 'டயலொக்'? இப்படிச் சொல்லுகிறவனிடமிருந்து எப்படித்தான் பணம் கொடுத்தவன் பெற்றுக்கொள்வானோ! கருங்கச் சொன்னால், அதனை அவனைத் தவிர ஆ(யா)ரும் அறியான்! கடன் கொடுத்துவிட்டு வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு திரியவேண்டிய நிலைதான்!

மேற்கூறப்பட்டவர்களில் கடன் வாங்குகிறவர்களிலும் கடன் கொடுப்பவர்களிலும் ஒரு வகையினரே. அதில், கடன் வாங்குகிறவன் வில்லனாகவும் கடன் கொடுக்கிறவன் அப்பாவியாகவும் ஆங்காங்கே ஒருசிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். இல்லை யென்றால் எப்படி மேற்சொன்ன 'டயலொக்' போன்றவை உருவாக வாய்ப்பிருக்கிறது? அந்தவகையில் கைமாற்றாக கடன்கொடுத்து(வட்டிக்கல்ல) உதவிசெய்ய நல்ல மனம் படைத்தவர்கள் கடன் வாங்கியவர்களின் கடும் போக்குகளால்- ஏமாற்றுத் தனங்களால் கடன் கொடுத்து உதவிசெய்வதைக் கைவிட்டு விடுகிறார்கள். இதனால் தாராள உள்ளம் கொண்ட உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்கள் கூட, "பிச்சை வேண்டாம் தாயே நாயை பிடி!" என்ற நிலைக்கு வந்து விடுகிறார்கள்.

### கடன் வாங்கிக் கடன் கொடுப்பது!

இன்னொரு பக்கத்தில், கடன் வாங்கிக் கடன் கொடுப்பவர்கள் என்ற ஒரு வகையினர் இப்போது(முன்பும்தான்) பிரபலமாகச் சில இடங்களில் பேசப்படுகிறார்கள். எல்லோருக்கும் விளங்கக்கூடிய பாணியில் சொல்வதானால், 'இரண்டு சத வட்டிக்கு கடன் வாங்கி, ஏழு சத வட்டிக்குக் கடன் கொடுப்பது!'கடன் கொடுப்பவர்களில்கூட சர்வாதிகாரப் போக்குடைய ஒருவரால் மட்டும்தான் இதனைச் செய்யமுடியும். இப்படிப் பட்டவர்களுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருக்கக்கூடிய வாய்ப்புக் குறைவு. அப்படி இருந்திருந்தாலும் அதனை ஏற்கனவே கறையான் அரித்திருக்கக்கூடிய வாய்ப்பு-க்களே அதிகமாயிருக்கும். இப்பேற்பட்டவர்களிடம் கடன் பெறுகிறவர்கள் வட்டிக்குக் கடன் வாங்கி வட்டியைக் கட்டுகிற ஏழைகளாக — பரம ஏழைகளாக இருப்பார்கள்.

### கைமாற்றாகக் கொடுத்த கவலையோ!

கைமாற்றாகவோ அல்லது அவசிய — ஆபத்து நேரத்தில் உதவும் பொருட்டு கடன் வாங்கிக் கடன் கொடுத்த கவலையில் எழுதுகிறாரோ என்றுகூட சிலர் சிந்திக்கலாம். சிலர் தங்கள் சுய அனுபவங்களில் இருந்து பேசுவார்கள். இன்னும் சிலர் தங்கள் சொந்த அனுபவங்களில் இருந்து பேசுவார்கள். மேலும் சிலர் தங்கள் சோக அனுபவங்களில் இருந்தும் பேசுவார்கள். எது எவ்வாறு இருந்தாலும் 'கடன் கேளாதீர்! கடன் உறவுக்குப் பகை' எனச் சின்ன வயதில் சிறுசிறு பலசரக்கு, தேனீர் கடைகளில் அடிக்கடி படித்த ஞாபகம் உண்டு. அது சரிபோலத்தான் படுகிறது.

### சிறு கடன்களும் சீரழிவுகளும்!

போர்ச்சூழலால் சின்னா பின்னப்படுத்தப்பட்ட கிராம மக்களிடையே காளான்களாக முளைத்த சில சிறு நிதி நிறுவனங்கள் கிராமப் புற மக்களின் பலவீனமான வறுமை நிலையை இனங் கண்டு வீடு வீடாகச் சென்று கடன் வழங்கும் கைங் கரியங்கள் வடக்கு கிழக்கில் சிறப்பாக நடந்தேறி வருகிறது.

தொடர்ச்சி 15ம் பக்கம் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை



சிவஞானம் மகேந்திர ராஜா
(ஓய்வு நிலை கலாசார உத்தியோகத்தர்)

# பாலர்களே பாதை அறிந்து பயணம் செய்வீர்

பாலர்களே பாலர்களே
படித்தால் மட்டும் போதாது
படுகுழி நோய்கள் பதுங்கி நிற்கும்
பாதை அறிந்து பயணம் செய்வீர்

பழக்க வழக்கப் பண்பு தானே
பாரில் உமை உயர்த்திவிடும்
பாசமுள்ள தாய் தந்தையரை
பணிந்து நடந்தால் புகழ் பெறுவீர்

கணனி மார்க்கக் கல்வியிலே
கட்டுப்பாடு வேண்டுமல்லோ
கால நேரப் பொழுதையெல்லாம்
கழித்தல் அதிலே ஆகாது

கருகும் சுவை போர்த்த உணவை
கண்ட படி உண்ணாதீர்
கனிந்த இயற்கை உணவதனை
கண்டு உண்ணப்பழகிடுவீர்

நவீனமான நாகரீகம்
நாட்டை ஆட்டுவிக்கிறதே
நாட்டிற்கேற்ற நாகரீகம்
நலிவடைந்து செல்கிறதே

நாட்டிற் கேற்ற நாகரீகம்
நாம் வளர்க்க துணிவோமே
நாட்டை நாளை ஆளும் நீங்கள்
நல்லுணர்வுடன் செயற்படுவீர்

போதை எனும் பொல்லா விலங்கு
புகுந்து விளையாடுதே
புயல் போல் நீங்கள் எழுந்து நின்று
புறம் தள்ளிட வேண்டுமல்லோ

போதை குடி கொண்டாலே
பொறுப்பு அனைத்தும் போய்விடுமே
பொறுமை இழந்து வறுமைப்பட்டு
புவியில் மாள நேரிடுமே.

மக்கள் நலன் குன்றா வாழ்வின்
மார்க்கம் தனை அறிந்திடுவீர்
மானிலத்தில் வளம் பெருக்கி
மகிழ்வுடனே வாழ்ந்திடுவீர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறை மாவட்டச் செய்திகள்

பாலையூற்று பங்கைச்சேர்ந்த அன்புவழிபுரம் சதாசகாய மாதா ஆலயத்தில் 04.02.2018 அன்று மரியாயின் சேனையினர் தங்கள் மரியாயின் சேனையினை அன்புவழிபுரத்தில் ஆரம்பித்து இருபத்தி ஐந்து ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு நமது ஆயர் அதிவந்தனைக்குரிய நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் ஞாயிறு காலை 8 மணிக்கு சிறப்புத்திருப்பலி நடை பெற்றது. இவ் வெள்ளி விழா கொண்டாட்டம். சிறப்பாக நடைபெற பங்குத்தந்தை மதுராங்கன் குருஸ் அடிகளாரும், அருட்தந்தை ஜெரி குயின்ட்டஸ் அடிகளாரும், மற்றும் பங்கு மக்களும் தங்கள் ஒத்துழைப்பை அளித்திருந்தார்கள். மரியாயின் சேனையினரின் விசேட அழைப்பை ஏற்று கியூரியா ஆன்ம இயக்குனர் அருட்தந்தை நிதிதாஸன் அடிகளாரும், அருட்சகோதரிகள், கியூரியா தலைவி லெவண்டினா மற்றும் ஆரம்ப காலகட்டத்தில் பிரசிடியகத்திற்கு உதவியாக இருந்த பாலையூற்று பிரசீடியத்தை சேர்ந்த திருமதி நிர்மலா, திருமதி மெட்டில்டா ஆகியோரும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.



தாகமாயிருக்கிறேன் எனும் யேசுவின் மறை பணி, திருப்பாடுகள் மேடை நாடகம் கடந்த 2018.03.18 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.30மணியளவில் திருகோணமலை குவாடலூப்பே அன்னை திருத்தல அரங்கில் சிறப்பாக நடை பெற்றது. பெருந்திரளான மக்கள் இக் காட்சியை காண வருகை தந்திருந்தனர். அலை ஓசை கலைத்தொடர்பக இயக்குனர் அருட்பணி றொகாண் பேனாட் அவர்கள் இம்மேடை நாடகத்தை நெறிப்படுத்தியிருந்தார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

### சமுதாய மன்னர்களே

தலைமையகத்தில் அமர்ந்திருப்பவர்
அத்தனை பேரும்
சமுதாய மன்னர்கள் தான்

நீங்கள் விழித்திருந்தால் - ஏழைகள்
நிம்மதியாக தூங்குவார்கள்
உங்கள் பதவி காலத்தை துஸ்பிரயோகம்
செய்யாவிட்டால் நீங்களும் மன்னர்கள் தான்

உங்கள் கைகள் தாழவில்லையானால்
ஏழைகளுக்கு ஏது துன்பம்
புண்ணியம் சேகரித்தால்
வம்சம் வளரும்

சமுதாய மேன்மையுள்ளவர்- மனதில்
ஊனமுற்றிருக்க மாட்டார்

சமுதாய மன்னர்களே!
சமுதாயத்தை, ஏழைகளை
தாரமிழந்த தங்கைகளை
தாய்மார்களை

தங்குமிடமின்றி தத்தளிப்பவர்களை
தாயன்பு கொண்டு பார்ப்பதற்கு
யாருமுண்டோ – அவர் தான்
சமுதாய மன்னர்கள்

தாரமின்றி தத்தளிக்கும் சுமை
நிம்மதி இழந்த வயிற்றுசுமை
பயங்கரம் நீங்கி
உளநலம் காணாத சுமை

வீதியிலிருந்து நார்காலி வரை
ஒவ்வொரு தலைவரும் - பெண்ணுக்காக
ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்தால்

பரிதவிக்கும் பாமர ஏழைகளுக்கும்
பண்புமிறா பெண்களுக்கும் -உங்கள்
தலைமையக உத்தியோகம்
பயன்படும் பதவியல்லவா

இந்நாட்டு சமுதாய மன்னர்கள்
அச்சில் அழித்தாலும் -மனதில்
அழியாத மன்னர்கள் தான் நீங்கள்

பூம்புகார் லைலா ரசூல்

**மறையுரையிலிருந்து 9ம் பக்கத்தொடர்ச்சி......**

அதை உட்கொள்கின்றவர்கள் வாழ்விலே எந்த விதமான வருத்தமும் இல்லை. அதை உட்கொள்கின்றவர்களிடத்திலே எந்த விதமான கலக்கமும் இல்லை.... எந்த விதமான துன்பியல் வாழ்வுமில்லை. எனவே தூய பவுல் சொல்கிறார். "வாழ்பவன் நானல்ல...என்னில் கிறிஸ்துவே."

இஸ்ராயேல் மக்களிடம் யேசு சொன்னார் " நீ நடக்க மாட்டாய் என்பதற்காக உன்னை கைப்பிடித்து நடக்கச் செய்தேன். நீ சோறு உண்ண மாட்டாய் என்பதற்காக உனக்கு பாலூட்டி வளர்த்தேன்." அவ்வாறே பிரியமானவர்களே உங்களையும் வளர்ப்பார். எமது பரிசுத்தர் ரட்சகர் உன்னையும் ஆசீர்வதிப்பார். அழிகின்ற உணவிற்காக உழைக்காதீர்கள். அதற்காக யாரெல்லாம் உழைக்கின்றோமோ அழிந்து போகும் அழியாத உணவு... நித்தியமான உணவு எங்களை நித்திய உலகிற்கு எம்மை கொண்டு செல்லும் ஒரே ஒரு உணவு நற்கருணையில் வீற்றிருக்கும் யேசுவே. அந்த ஆண்டவரை நம்புவோம் ஆண்டவரை துதிப்போம். நன்றி.....

**தொகுப்பு : கிறிஸ்டி முருகுப்பிள்ளை**

**சீரழிக்கும் சீட்டு 11ம் பக்கத் தொடர்ச்சி.........**

ஐந்து பேர் கொண்ட குழுக்களாக பிரித்து அவர் களுக்கு ஆசை காட்டி கடன்களை திணித்து ஒருவர் பெற்ற கடனைத் திரும்ப செலுத்தும் பொறுப்பை அக்குழுவுக்கே சுமத்தி இலகுவாக கடனை கறந்து விடுகிறார்கள். வாரா வாரம் கடன் காசை கட்டியாக வேண்டிய நிலையில் அதைச் செலுத்த வேறு யாரிடமோ வட்டிக்கு கடன் வாங்கி வாங்கி கையறுந்த நிலையில் அடுப்புக்குள் பூனை உறங்கும் நிலை வந்ததும் கையில்...கழுத்தில் ...காதில் இருந்ததை எல்லாம் விற்றும் முடியாத போது இருந்த நிலத்தையும் விற்று நிர்கதியாகுவோர் தொகை அதிகரித்துக் கொண்டே போகும் நிலை சமுதாயத்தின் சீரழிவுதான்....

இதன் விளைவு தற்கொலைகளில் முடியும் போது தான தமிழ் சமூகம் அழிந்து போக ஆரம்பித்துள்ளது! எச்சரிக்கையாய் இருங்கள் சிந்தியுங்கள்... உள்ளதைக் கொண்டு திருப்தி கொள்வோம் கடன் வேண்டாம்.

முற்றும்.....

கத்தோலிக்க திருமறை கா.பொ.த. உயர்தரம்

# ஆசிய நாடுகளில் கிறிஸ்தவத்தின் வரலாறு அறிந்து ஆக்க பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவார்



சுரேந்தினி மணிவண்ணன்

1. இலத்தீன் திருச்சபை

- திருத்தந்தையின் வழிகாட்டலையும், இலத்தீன் வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக் கொண்டவர்கள். "இலத்தீன் திருச்சபையினர்" என அழைக்கப்பட்டனர்.
- இந்தியாவிலுள்ளஅனைத்துத் திருச்சபைகளுள் ஆகக்கூடிய உறுப்பினர்களைக் கொண்டு முழு இந்தியாவிலும் இயங்கும் தனிப்பெரும் திருச்சபை இதுவாகும். இன்று தொழில் நிமித்தம் இடம் பெறும் இடப்பெயர்வுகளால் இத்திருச்சபையின் மக்கள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றனர்.
- இதன் "அமைப்பு முறையானது" பங்கு என்று அழைக்கப்படுகின்றது. பங்கின் தலைவராக அதன் ஆன்மீக வழிகாட்டியாக பங்குத் தந்தை செயல்படுவார். பல பங்குகள் ஒன்றிணைந்து ஒரு மறைமாவட்டத்தை உருவாக்குகின்றன. அதன் தலைவராக ஆயர் செயற்படுவார்.
- 1988 தொடக்கம் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் வழிகாட்டுதலின் கீழ் இந்திய இலத்தீன் திருச்சபைக்கான கத்தோலிக்க ஆயர் மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.
- இத்திருச்சபையின் "வழிபாட்டு முறையானது" மேலைத்தேய மரபு முறைகளைச் சார்ந்ததாகும்: இவர்கள் வழிபாடுகளுக்கும் பக்திமுயற்சிகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர்.
- இவர்களின் திருவழிபாட்டில் திருப்பலி முக்கியத்துவம் பெறுவதுடன் புனிதர் வணக்கம், திருப்பயணங்கள் என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன.
- 2ம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து இந்திய இலத்தீன் திருச்சபையானது அதன் வழிபாட்டிலும் ஏனைய விடயங்களிலும் இந்திய பண்பாட்டு மயமாக்குவதில் கவனம் செலுத்துகிறது. இன்று இப்பணியானது இந்திய இறையியலிலும், குருக்கள், துறவிகளின் வாழ்க்கை முறையிலும் திருத்தூதுப் பணியிலும் தாக்கம் செலுத்துகிறது. மேலும் இந்திய நாட்டின் கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளுக்கும் பெரும் பங்காற்றி வருகிறது.
- இம்மூன்றினதும் (இலத்தீன் திருச்சபை, சீரோ மலபார், சீரோ மலங்கார) ஆரம்பம், வழிபாட்டு முறைகள் போன்றவற்றை நோக்கும் போது அவை ஒன்றை ஒன்று பாதிக்காமல் தாமாகவே சுதந்திரமாக இயங்கி கத்தோலிக்கத் திருச்சபையின் ஒற்றுமையை பேணி வளர்ப்பதைக் காணலாம்.

## வைதீக சீரிய திருச்சபைகள்

- 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேய மறைபரப்பாளர் இந்தியா வந்த போது அங்கு சீரிய திருச்சபையுடன் நெருங்கிய உறவு வைத்திருந்த தோமையார் கிறிஸ்தவர்கள் இருக்கக் கண்டனர்.
- எனவே போர்த்துக்கேயர் தங்களுடைய "பத்ரோ வாடோ" அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களைத் திருத்தந்தையின் தலைமையின், வழிநடத்தலின் கீழ் வரும்படி அழைத்தனர்.
- பலர் அவ் அழைத்தலை ஏற்றுக்கொண்டனர். அவர்களே சீரோ மலபார் திருச்சபையினர் என்றும் சீரோ மலங்கரா திருச்சபையினர் என்றும் பார்த்தோம். ஆனால் அவ்வழைத்தலை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் ஒன்றிணைந்து, 1653 இல் மட்டன்சேரி என்னும் இடத்தில் தமக்கு நிர்வாக சுதந்திரம் கேட்டு உண்டாக்கிய "கூனன் சிலுவை ஆணை" என்ற கிளர்ச்சியைத் தொடர்ந்து, பிரிந்து தனியே சென்று "வைதீக சீரிய திருச்சபையை" உருவாக்கினர்.
- பல ஆண்டுகளாக அவர்களுக்கென்று ஒரு தலைவர், ஆயர் இருக்கவில்லை, பல கீழைத்தேய சபைகளுக்கு உதவிக்காக விண்ணப்பித்தனர். ஆனால் எவரும் முன்வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறுதியில் சீரிய அந்தியோக்கிய பிதாப்பிதா அவர்களுக்கு உதவ முன் வந்தார் அச்சபையானது 1912 வரைக்கும் அந்தியோக்கிய பிதாப்பிதாவின் நேரடி அதிகாரத்தின் கீழ் இருந்து வந்தது.
- அதன் விளைவாக பல ஆண்டுகளாக பலவிதமான பிரச்சனைகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டி இருந்தது. நீண்ட காலப் பிரச்சனையின் பின் 1912 இல் அது இரண்டு சபைகளாகப் பிளவுபட்டது அவையாவன.

1. மலங்கார சீரிய வைதீக திருச்சபை (யாக்கோபித்தர்)
2. மலங்கார வைதீக சீரிய திருச்சபை (கீழைத்தேய கத்தோலிக்கர்)

இவர்களுக்கிடையிலான பிளவு இன்றும் தொடர்கிறது.

1. மலங்கார சீரிய வைதீக திருச்சபை (யாக்கோபித்தர்)

இத்திருச்சபையானது அந்தியோக்கிய பிதாப்பிதாவின் கீழ் இயங்குகின்றது. அதன் உறுப்பினர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து வாழ்கின்றனர். இன்று இந்தியாவில் 1.4 மில்லியன் மக்கள் அங்கத்தவராகக் காணப்பட்டனர்.

2. மலங்கார வைதீக சீரிய திருச்சபை (கீழைத்தேய கத்தோலிக்கர்)

இத்திருச்சபையானது கீழைத்தேய கத்தோலிக்கரால் நிர்வகிக்கப்படுகிறது. அதன் செயற்பாடானது 1934 இல் மேற்கொள்ளப்பட்ட சட்ட மன்றத்திற்கு ஏற்ப இயங்குகின்றது. அதனடிப்படையில் மலங்கார சீரிய கிறிஸ்தவ அமைப்பினால் அது வழிநடத்தப்படுகிறது. அவ் அமைப்பினால் தெரிவு செய்யப்படுகின்ற ஆயர் அதன் தலைவராக இருக்கின்றார். இன்று இந்தியாவில் இத்திருச்சபையில் இரு மறைமாவட்டங்களும் 2.6 மில்லியன் விசுவாசிகளும் காணப்படுகின்றனர்.

மார்தோமையார் திருச்சபை

- இத்திருச்சபையானது புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தை தொடர்ந்து இந்தியா வந்தனர். 1806 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆளுனர் ஒரு அங்கிளிக்கன் குருவை இந்தியாவிலுள்ள பழமைவாய்ந்த தோமையாரின் ஆலயம் பற்றி ஆராய்ச்சி செய்ய அனுப்பினார்.
- கேரளம் வந்த அங்கிலிக்கன் மறைப்பரப்பாளருக்கும் தோமையார் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் நல்லுறவு ஏற்பட்டது.
- இதன் விளைவாக இருவரும் இணைந்து கோட்டயத்தில் ஒரு இறையியல் குருமடத்தைக் கட்டினர். ஆனால் அங்கிளிக்கன் மறைப்பரப்பாளர் தங்கள் புரட்டஸ்தாந்து போதகங்களை குருமட மாணவர்கள் மேல் திணிக்கத் தொடங்கவே மலங்கார திருச்சபையினர் அங்கிளிக்கன் சபையுடனான தங்கள் உறவை முறித்துக் கொண்டனர். இது இவர்களின் சபைக்குள்ளே பிளவுகளைக் கொணர்ந்தது.
- ஒரு சிறிய பிரிவினர் தங்கள் சபையை விட்டு விலகி அங்கிளிக்கன் சபையுடன் முற்றும் முழுதாக இணைந்து கொண்டனர்.
- இன்னொரு பெரிய பிரிவினர் தங்களுக்கு ஒரு சீரமைப்பும் வேண்டாம் என்று கூறி பழைய மலங்கார வைதீக திருச்சபையில் தொடர்ந்து இருந்தனர்.
- மற்றொரு பிரிவினர் தங்கள் சபையின் வழிபாட்டிலும், வாழ்க்கையிலும் பெரிய சீரமைப்புக்களைப் புகுத்தத் தொடங்கினர். ஐம்பது ஆண்டுகளாக சபையினுள் இருந்து முரண்பாடுகளைத் தோற்றுவித்த அவர்கள் 1836 இல் மலங்கார திருச்சபையில் இருந்து வெளியேறி "மார் தோமா திருச்சபை" என்ற பிரிதொரு சபையைத் தாபித்தனர். இன்று இச்சபையில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் அங்கத்தவர்களாக உள்ளனர்.
- ஜேர்மன் லூத்தரன் சபையே இந்தியாவிற்கு முதன் முதல் வருகை தந்த புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தச் சபையாகும். இவர்கள் 1706ம் ஆண்டு வருகை தந்தனர். அதனைத் தொடர்ந்து 18ம் 19ம் நூற்றாண்டில ஏனைய பல புரட்டஸ்தாந்து திருச்சபைகள் இந்தியாவிற்குள் வருகை தந்தன. (அவையாவன அங்கிளிக்கன் திருச்சபை, மெதடிஸ்ற் திருச்சபை, பப்ரிஸ்ற் திருச்சபை, பிறெஸ்பிற்றேரியன் திருச்சபை, வட இந்திய திருச்சபை, தென் இந்திய திருச்சபை, இரட்சணிய சேனை, பெந்தகோஸ்தே திருச்சபை என்பனவாகும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமும் விஞ்ஞானமும்

- அருட்சகோதரி.றொமாலா அன்ரனி (H.C)

வில்லியம் பார்வே 1928 இல் குருதிச்சுற்றோட்டத்தை கண்டுபிடித்த பின்னர் மேல் நாட்டு மருத்துவம் விஞ்ஞானத்துடன் இணைந்தது. இதனால் மனித உடல் மட்டுமல்ல அதன் வெவ்வேறு தொகுதிகள் பற்றிய விஞ்ஞான விளக்கம் பெறப்பட்டது. அத்துடன் நோய்கள் தொடர்பான சிக்கல் தன்மை பற்றியும் விஞ்ஞான விளக்கம் ஏற்பட்டது.

ஒரு நோயாளியின் நோய்களை அறிய இனங்காணல், சிகிச்சை அது தொடர்பான ஆய்வு என்னும் 3 அம்சங்களில் கவனம் செலுத்தி நோயை குணப்படுத்த உயிரியல் மருத்துவம் ஆரம்பமானது.

குருதி அழுத்தத்தை அளவிடும் கருவி கண்டுபிடிக்கப்பட்டமை இன்னொரு புதிய ஆரம்பமாகும். இக்கருவி குருதிக்கலன்களின் குருதிப் பாய்ச்சலுக்குரிய அமுக்கத்தையும், விரிதல் சுருங்கல் குருதி அமுக்கங்களையும் அளவிடும் Hepto Manometer 1860 இல் பிரான்ஸிஸ் ஏலைன் யூல்ஸ் மூரே என்பவரால் கண்டறியப்பட்டது. இதனால் மருத்துவ வைத்தியர்கள் குருதிக்கலன்கள் இதயம் மூளை உட்பட பல எண்ணிக்கையான அங்கங்களில் நோய் நிபந்தனைகளை இனங்கான பல வழிகளில் உதவியது.

மாரடைப்பை அறிய உதவும் E.C.G கருவியானது 1903ம் ஆண்டு V.M. அயன் நோவன் என்பவரால் கண்டறியப்பட்டது. மனித இதயமானது மின் தொழிற்பாடும், பௌதீக தொழிற்பாடும் ஒருங்கே இயங்கும் ஓர் அங்கமாகும். இதனை அறிய E.C.G கருவி உதவுகிறது. அத்துடன் இதயத்துடிப்பு பற்றிய பல்வேறு குறைபாடுகளையும் அசாதாரண போக்குகளையும் அறிவதற்கு பயன்படுகிறது.

மருத்துவத்திற்குரிய மற்றொரு கண்டுபிடிப்பு துடிப்பு ஒட்சிமானி (Pulse Onimeter) ஆகும். இது குருதியில் ஒட்சிசன் நிரம்பலடையும் அளவை அளவிடுகின்றன. அத்துடன் விபத்தினால் பாதிக்கப்பட்ட குருதிப்பெருக்கு, மூச்சுவிடுதல் குழப்பம் போன்ற நோயாளிகளுக்கும் சிகிச்சை மேற்கொள்ள இக்கருவி உதவுகிறது. உயிர் மருத்துவத்துடன் தொடர்புடைய இன்னொரு கருவி நெபுலைசர் எனப்படும் துகள் எறிப்பான் ஆகும். இது மருந்துகளை மிகக் குறைந்த அளவுகளில் (5μ>) மிக வினைத்திறனாக இலகுவாக நுரையீரல்களுக்கு செலுத்துகிறது. நேரடியாக மருந்து துகள்கள் நுரையீரல்களின் சிற்றறைகளுக்கு செலுத்தப்படுவதால் உடனடியாகவும் இலகுவாகவும் நன்மை கிடைக்கிறது.

மற்றொரு உயிரியல் சாதனை கூழ்பிரிப்பான் (Dialysis) கருவியாகும். இது குருதி, சிறுநீரகத்தொகுதி வடிகட்டல் தொடர்பான பாதிப்பில் சிறுநீரக மாற்றீடு செய்யும் வரை செயற்கையாக சிறுநீரகத்தின் தொழிற்பாட்டை பூரணமாக நிகழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவமும் விஞ்ஞானமும்

அடுத்து மருத்துவ சிகிச்சையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியது உடல் அகம் நோக்கிய (Laproscopy) செயற்பாடாகும். இக்கருவி மூலம் உடலினை வெட்டி திறக்காமல் இதயசத்திர சிகிச்சைகளையும், பித்தப்பையிலுள்ள கற்களை அகற்றவும் உதவுகிறது.

இதய சத்தம் அசாதாரணமாக காணப்படும் நோயாளிகளுக்கு விஷேட இதய முடுக்கி (Pace maker) வெளியிலோ உட்புறமோ செலுத்தி சீர்படுத்த தற்போது வசதிகள் ஏற்பட்டுள்ளது. 1895 இல் x கதிர்கள் ஜேர்மன் நாட்டு ரொன்ஜன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட பின் புற்று நோய்களுக்கு சிகிச்சை ஏற்படுத்துவதில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. கணனி வரையி அலகீடு (CTScan), காந்த பரிவு அகத் தோற்றுருவாக்க அலகீடு (MRI Scan), கழி ஒலி அலகீடு (Ultra Sound Scan) காமா புகைப்படக்கருவி என்பன மிகவும் முன்னேற்றமடைந்த உயிர் மருத்துவ பொறியியல் சாதனங்களாகும். இதனால் கண்ணிலும் சுகாதாரம் சம்பந்தமான சிகிச்சைகளிலும் இச்சாதனங்களின் உதவியினால் உணர்வு நீக்கம் இல்லாமலேயே (General Anesthesia) மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள முடிகிறது.

உடற்கூற்று மருத்துவம், மன உளைச்சல், விளையாட்டுத்துறை மருத்துவம் என்பவற்றிலும் பாரியளவில் முன்னேற்றம் ஏற்பட விஞ்ஞானத்தின் பொறியியல், இலத்திரனியல், எண்ணிலக்க தொழிநுட்பம் மிகப் பெரிய பங்களிப்பை மேற்கொண்டுள்ளது. எண்ணிலக்க அமுக்கமானி குருதி குளுக்கோ மானி என்பனவும் இதற்கு சான்றாகும்.



இதே போல் இதய சுருக்க வீதம், சுவாச வீதம், உடல் திணிவு சுட்டி (B.M.I) குருதிக்கல் எண்ணிக்கை என்பனவும் நவீன நுண்ணறிவு தொலைபேசி பிரயோகங்களுடன் இணைக்கப் பட்டுள்ளதால் தகவல்களை இலகுவாக பெற முடியும். சாமர்த்தியமான நுண்ணறிவு அலைபேசி (Smart Phone) மூலமும் வாயில் வழி (Wi-Fi) மூலமும் இலகுவில் தகவல்களை பெற விஞ்ஞான தொழிநுட்பம் வழிகோலியுள்ளது. முன்பு நிறுத்தப்பட்ட மனித இதயத்தின் தொழிற்பாடு செயற்கையாக வைத்தியர்கள் கையினால் அமுக்கி (Manual massage) மூலம் மேற்கொண்டனர். ஆனால் இன்று உதறல் நீக்கி (Defibrillator) இதற்கு பதிலாக பயன்பட்டு இதயசத்திர சிகிச்சையின் போது இதய தொழிற்பாட்டை நிறுத்தி மீளவும் ஆரம்பிக்க உதவுகிறது.

இவ்வாறு பல வழிகளில் விஞ்ஞானம் மருத்துவத்துடன் இணைந்து பல உயிர்களை நோயின்றி நடமாட வைக்கின்றது. நவீன விஞ்ஞான தொழிநுட்ப கருவிகளின் பயன்பாட்டை நாமும் அறிந்து விஞ்ஞான விரைவான உலகில் சிந்தித்து செயற்பட்டு எம் வாழ்வை இலகுவாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

## புத்தாண்டே நீ வருக



புத்தமும் சைவமும்
புனித இஸ்லாம் கிறிஸ்துவும்
இத்தரையில் இனிதிட வாழ்ந்திட
புத்தாண்டாம் சித்திரையே... நீ
வந்து பிறந்திட வேண்டும்.
அன்பும் அறமும் அறிவும் தழைத்து
அகிலத்தில் செல்வம் செழித்திட
புத்தாண்டாம் சித்திரையே நீ
வந்து பிறக்க வேண்டும்.

உண்மை, உயர்வு, ஒழுக்கம்
பண்பு, பணிவு, பகுத்தறிவு....நமது
எண்ணம் போல் அனைத்தும் ஈடேற
சித்திரையே நீ வந்து பிறக்க வேண்டும்
கண்ணியம், கடமை, கட்டுப்பாட்டோடு
கனிவாக நாம் வாழ
புண்ணிய வருடமே புத்தாண்டே நீ
வந்து இத்தரையில் பிறக்க வேண்டும்

சாதி, சமய வேறுபாடுகள் மறந்து
சம தர்மமும் மண்ணில் மலர்ந்திட
நீதி நெறியில் நின்றுழைத்து
நீடூழி நாம் வாழ்ந்திட
புத்தாண்டே நீ வந்து
பிறக்க வேண்டும்.



இராசக்குழி
சிவகுருநாதன்

நேர்மை

சொல்லால், செயலால், தந்திரத்தால் என எந்த விதத்திலும் பிறரிடமிருந்து கூடுதலாகவோ, ஏமாற்றியோ எதையும் மனசாட்சிக்கு விரோதமாகச் செய்யாமல் இருப்பதே நேர்மை. நேர்மையான முயற்சியில் கிடைத்த வெற்றியின் மூலமாகக் கிடைக்கும் மகிழ்ச்சியின் நேரத்தை யாரும் அளக்கவே முடியாது.

-பெல்ப்ருபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகப்புத்தகத்திலிருந்து ....

# இயேசு என்னும் கலகக்காரர்.

தபசு காலங்களில் குறிப்பாக புனித வாரத்தில் எங்களூர் ஆலயங்களில் யேசுவின் திருப்பாடுகளை நடித்துக் காண்பிப்பார்கள், நான் சிறுவனாயிருந்த ஒரு நாளில் திருப்பாடுகள் நடித்துக் காண்பிப்பதற்கு முந்தைய நாள், ஆலயத்தின் முற்றத்தில் சாதுவாய் நிலவு காய்ந்த ஓர் இரவில் கலர் டிவி வைத்து யேசுவின் வாழ்க்கை குறித்து திரைப்படம் ஒன்றைப் போட்டார்கள். தொலைக்காட்சி என்பது ஒன்றிரண்டு வீடுகளில் மட்டுமே சாத்தியப்பட்ட அந்தக் கிராமம் அன்றைய நாளில் கோவில் முற்றத்தில் திரண்டிருந்தது. இந்தக் கூட்டத்தின் தொண்ணூறு விழுக்காட்டுக்கும் அதிகமானோர் அன்றைக்குத் தான் கலர் டிவியைக் கண்டார்கள்.

யேசுவின் வாழ்க்கை வரலாற்றைக் காண்பித்த அந்த திரைப்படத்தின் வந்த யேசுவை யாருக்கும் பிடிக்கவில்லை அடுத்த நாள் ஊர் முழுவதும் இந்த யேசுநாதரை விமர்சித்த குரல்கள் எழுந்தன. மரியாயின் சேனைகளும், திரு இருதய ஆண்டவரின் சேனையும் ஒருங்கே போய் சுவாமியிடம் முறையிட்டனர். இந்த இரண்டு சேனையினரும் இரண்டு நாட்களுக்கு முன்னர் கள்ளுக்கொட்டிலில் இருந்து தலைகால் தெரியாமல் ஊருக்குள் வரும் ஆட்கள் தொடர்பிலும் முறையிட்டவர்கள்.

அந்த யேசுநாதர் மிகவும் அந்நியாயமாய் இருந்தார். அவர் மிக வேகமாக நடந்தார். பெருஞ்சத்தம் எழுப்பி சிரித்தார், சீடர்களை கிள்ளி பகிடி விட்டார், முகத்தில் குறும்புத்தனமும் விடுதலைக்கான வேட்கையும் இருந்தது அவர் ஆடைகள் தூய வெண்மையாக இல்லாமல் பழுப்பேறி இருந்தது . தோளிலிருந்து இடுப்புக்கு குறுக்காக கட்டப்படும் நேர்த்தியான சிவப்பு வஸ்திரத்தை அவர் அணிந்திருக்கவில்லை மாறாக இடுப்புக்கு குறுக்கே பின்னிக் கட்டிய ஒரு கயிற்றை கட்டியிருந்தார். அவர் விருந்துகளில் நடனமாடினார் அவர் போதிக்கும் போது குரல் வளை புடைத்தது. பெருஞ்சத்தமாய்க் கத்தினார், அவருக்கு முகத்தில் வியர்த்து வழிந்தது. அதை துடைத்து எறிந்து விட்டு கையை தன் ஆடையில் துடைத்துக் கொண்டார். இப்படியான அவர் யேசு இல்லை என்று ஊரும் சனமும் குறைபட்டுக்கொண்டது.

யேசு ஏன் அப்படியாக அந்நியப்பட்டுப்போனார்?

எங்கள் கிராமத்தில் யேசு குறித்து வேரோடியிருந்த கற்பிதங்கள் அந்தமாதிரி. யேசு சாந்த சொரூபி, அன்பே உருவானவர், இரக்கமே வடிவானவர் போன்ற வேதவசனச் செருக்கல்களும், பாதிரியாரின் போதனைகளும், மக்கள் மத்தியில் முகத்தில் எந்த உணர்வலையையும் காட்டாமல் அமைதியாக உட்காந்திருக்கும் ஒரு உம்மணா மூஞ்சியை யேசுவாக கற்பனை செய்ய வைத்து. குறும்புக்காரனும், பலத்துச் சிரிப்பனும், பகிடி விடுகின்றவனும் அன்பே உருவாக இருக்க முடியும் என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

யேசு குறித்து கற்பிதங்களும், அவர் குறித்து பழக்கத்தில் இருந்த சித்திரங்களும் என் சமூகத்தில் காண்பிக்கப்பட்ட திரைப்படங்களும் யேசுவை ஒரு தயிர் சாதம் போலவும், பெண்மைத் தன்மையோடும் காண்பித்தன. பொதிகையில் ஒளிபரப்பான "கருணா மூர்த்தி" என்ற தொலைக்காட்சி நாடகத்திலும், வருடா வருடம் - இன்றைக்கும்- பெரியவெள்ளி தினத்தில் தொலைக்காட்சிகளை ஆக்கிரமிக்கும் "ஜீசஸ்" திரைப்படத்திலும் காண்பிக்கப்படும் யேசு நாதரை போல அழகானப் பெண்ணைப் போன்ற ஒருவரை நீங்கள் எங்கும் பார்த்துவிட முடியாது. தாடி மீசையுடன் கூட அப்போது தான் சாமத்தியப்பட்ட பெண்போன்ற வெட்கத்தை முகத்தில் தேக்கி வைத்துக்கொண்டே எப்போதும் வளைய வருவார். அதில் அத்தனை நளினம் இருக்கும். கை காலில் ஒரு சிறு பிசிறு இருக்காது. தூசு ஒட்டியிருக்காது. உரோமம் இருக்காது எப்போதுமே வியர்வை வழியாத முகம். சாயம் அடிக்கப்பட்ட உதடு. அழுக்கே இல்லாத ஆடைக்குள் யேசு நாதர் வானத்து தேவதைப் போல் இருப்பார். இரண்டு வார்த்தை பேசுவதற்கு கால்மணி நேரம் இடைவெளி விட்டு பேசுவார். நூறு மீட்டர் தூரத்தை கடப்பதற்கு நான்கு நாட்களாகும் என்று ஊகிக்கும் படியான அன்ன நடை நடப்பார். தவிர முத்திப்போன முகத்தோடு உட்காந்திருப்பார். சாந்தமாக இருக்கிற அந்த முகத்தில் ஐம்பது வயது தாண்டிய களை இருக்கும். இப்படியாக யேசுவை அன்பே உருவானவர் என்று காட்ட எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசு என்னும் கலகக்காரர்

கொண்ட அத்தனை பிராயத் தனங்களின் வெளி விளைவு தான் அந்த யேசு. அதுவே எங்கள் புத்தியில் பதிந்துபோய் இருந்தது. இதனால் யாருக்கும் இதற்கு நேர்மாறான யேசுவை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

முதலில் இயேசு ஒரு தச்சனின் மகன். தச்சன் எந்த வித இலத்தரனியல் உபகரணங்களும் இல்லாத அந்த நேரத்தில் மனித வலுவும். மனித ஆற்றலால் இயங்கும் பொறிகளையும் வைத்து தச்சு வேலை செய்த ஒருவனின் உடல் முறுக்கேறி அல்லவா இருக்கும்? கைகள் காய்த்துப்போய் இருக்கும். உடல் இறுகி திமிரேறி இருக்காதா? நளினமான விரல்கள் எப்படி வாய்க்கும்? யேசுவுக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். பேசாமல். வெறுமனே வெட்கச் சிரிப்பை வைத்துக் கொண்டிருக்கும் ஒருவனால் எப்படி அத்தனை நண்பர்கள் சாத்தியமாய் இருக்க ஏலும்? குறும்புக்காரர்களும். நகைச்சுவை உணர்வு அதிகம் கொண்டவர்களுமே அதிக நண்பர்களை சந்திக்கிறார்கள். இறக்கும் போது இயேசுவுக்கு முப்பத்து மூன்று வயது.

ஓர் இனத்தின் விடுதலைக்காய் போராடின 33 வயது இளைஞனின் முகம் மிந்து போன கோதுமை மாவில் உருட்டிய பந்து போல உணர்வுக் களையே இல்லாமல். உதட்டுச் சாயத்தோடும். "தேமே" என்றா இருக்கும்? இளமையும் இலட்சியமும் வெறியும் அவன் Stright செய்யப்பட்டு வாரப்பட்ட தலைமுடி. நேர்த்தியாக டிரிம் செய்யப்பட்ட தாடி எல்லாம் எப்படி சாத்தியம்? சாத்தியம் என்றால். யெருசலேமின் மற்ற ஆண்கள் எல்லாம் பரட்டைத் தலையுடனும். சீரற்ற தாடியுடனும் அலையும் போது யேசுவுக்கு மட்டும் எப்படி ஒரு அழகு நிலையஅதிகாரியின் மகளின் ஒப்பனை வாய்க்கிறது? சாட்டை பின்னி. கோவிலில் புறாவிற்ற ஆட்களை அடித்து விரட்டின புரட்சியாளன் யேசு பவுடர் பூசி வெட்கச் சிரிப்பு கலந்த முகத்தோடு சாட்டை பின்னி ஆட்களை அடிப்பதை நினைத்துப் பார்க்க இயலுகிறதா? இயன்றால் எவ்வளவு நாரகாசமாக இருக்கிறது? யேசு சாட்டையால் அடித்த நேரத்தில் ஒரு புறா கடைக்காரன் கூட திரும்பி அடிக்க பாய்ந்திருக்க மாட்டானா? அவர்களுக்கு திரும்பி அடித்து விரட்ட கடும் உடல்வலு கொண்ட ஒரு தச்சனால் ஆகுமா? தான் கதைப்பது தன் காதுக்கே கேட்காமல் பேசும் ஒருவரால் எப்படி மலைப்பிரசங்கம் பண்ணியிருக்க முடியும்? பாறையின் உச்சியில் நின்று கூடியிருந்த ஆயிரக்கணக் கானவர்களுக்கு கேட்கும் படியாய் பிரசங்கம் செய்வதனால் குரள்வளை புடைக்க கத்த வேண்டாமா? குறுக்கு கேள்விகளுக்கும். வாதம் புரியவென்று வரும் மத குருக்களோடும் லேவியரோடும் தர்க்கிக்க உரத்த குரல் வேண்டாமா? பிடிக்கத் துரத்தும் ரோமின் படைகளிடமிருந்தும். அடிக்கத் துரத்தும் மக்கள் கூட்டத்தினரிடமிருந்தும் தப்பித்து ஓட ஒய்யார நடைபோட்டு கட்டுப்படி ஆகுமா? பாறைகளையும் சுற்று மதில்களையும் தாண்டி குதித்தோட தரை கூட்டுகின்ற வெண்ணிற ஆடையோடு முடியுமா? தூசு பறக்கின்ற பாலை நிலத்தில் தூய வெண்மை எப்படி சாத்தியமாகும்? திராட்சை மது குடிக்கின்றவர் ஆடலும். பாடலும் கரைபுரண்டு ஓடுகிற ஒரு விருந்தில் ஆடாமல் இருந்துவிட முடியுமா? இதையெல்லாம் யோசிக்க ஆரம்பித்த பிறகு முன்னொரு நாள் சாதுவாய் நிலவுகாய்ந்த நேரத்தில் ஆலய முன்றலில் காண்பிக்கப் பட்ட யேசுதான் நிஜம் எனப்பட்டது. யேசு எப்படி இருந்திருப்பார் என்ற குறைந்தபட்ச உண்மையை அறிய விரும்பும் ஆட்கள் தலைவன் ஸ்கோர்ஸசியின் " the last tempatation of christ" பாருங்கள்.யேசு முறுக்கேறிய உடல்வலுக் கொண்ட ஒரு இளம் புரட்சியாளன் இவரின் அன்பு மாவு பூசிய முகத்தில் காட்டப்படுவதில்லை. அவர் தன் இனத்தை நேசித்தார். அவர் விடுதலையை விரும்பினார். ஆட்சியாளர்களின் கொடுரத்தில் இருந்தும். பிற்போக்குத் தனங்களில் இருந்தும் சனங்களை வெளியே கொண்டுவரப் போராடினார். கலகம் செய்தார். அடித்தார். அன்புசெய்தார். அந்த அன்பு காட்டுதலின் நடுவில் தன் சக்திக்குட்பட்டு விளிம்பு நிலைமக்களை சோஸ்த்தப்படுத்தினார். அவரின் இரக்கம் அப்படித்தான் வெளிப்பட்டது. பெண்மையின் உருவத்தோடோ குரலோடோ கிடையாது. கிடைத்த இடைவெளியில் எல்லாம் வாழ்க்கையை நண்பர்களோடு கொண்டாடி தன்னால் ஆன மட்டும் தன் இன விடுதலைக்காக போராடினார். அபத்தங்களுக்கு எதிராகவும். called விதிகளுக்கும் கலாவதியாகிப் போன சட்டங்களுக்கு எதிராகவும் உண்டாக்கப்பட வேண்டிய புதிய நியமங்களை கூறியும் குரல் எழுப்பின கலகக் காரன் யேசு அவரை அப்படியே ஏற்றுக்கொண்டு இவரை பின்பற்றுதலே முறை அவர்பெயரில் அபத்தங்களை நிகழ்த்துவதல்ல!

சற்று சிந்தியுங்கள்!....

– கிஷோகர்

ஸ்ரெனிஸ்லோஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரையே நற்செய்தி தா

சித்திரை மகளே: நல்ல
செய்தியைக் கொண்டு வந்து,
இத்தரை மாந்தர் காதில்
இன்பத்தை இறைத்துச் செல்லு!

புத்தரின் கொள்கை பற்றும்
புனிதர்கள் வாழும் தீவில்,
சத்தியம்' நிலைக்கும் வண்ணம்
சமரசம் வாழச் செய்வாய்!

மதம் மொழிச் சாயம் பூசும்
மதியிலார் மதியை மாற்றி-
இதந்தரு வாழ்வைக் காட்டு
இன்மையை நாளும் போற்று!

ஆண்டவன் படைப்பில் மாந்தர்
அனைவரும் சமனே யென்னும்,
மாண்பினை உண்டு பண்ணு
மனங்களை மாற்ற எண்ணு!

செம்மையே குருதி இந்தச்
செகம் வாழும் மனிதர்க்கு என்னும்-
உண்மையை உணரச் செய்வாய்
உலகெல்லாம் மகிழ்வைப் பெய்வாய்

**செல்வி. வி.ஜருக்ஷி**

**தி/புனித மரியாள் கல்லூரி,**

**திகோணமலை**



## கருத்தரங்கொன்றில் கேட்டு சுவைத்தவை

அவர் ஓர் அருட்தந்தை. அவரது மருமகளின் வீட்டிற்கு ஒரு முறை விஜயம் செய்திருந்தார். அவ் வீட்டில் மருமகளின் பிள்ளையும் நின்றிருந்தனர். அங்கு அளவளாவிக் கொண்டிருந்த போது பேத்தி பாதரிடம் கேட்டாள்

"பாதர் உங்கள் போனைத் தாருங்கள்"

"ஏன் எனது போன் உங்களுக்கு?"

"தாருங்களேன்..."

"என்ன பார்க்கப் போகிறீர்கள்...உங்களுக்குரியவை எதுவும் என் போனில் இல்லையே..."

"கேம் விளையாட வேண்டும்..."

"எனது போனில் கேம் எதுவுமில்லையே..."

"தாருங்களேன்...கேமை நான் டவுண்லோட் பண்ணிப் பார்ப்பேன்"

பாதர் வாயடைத்துப் போனார். ஏனெனில் அந்தச் சிறுமியின் வயது மூன்றரை!

**சுவைத்தவர் – எக்ஸ்.தர்ஷனா**





# ஏற்புடைய மன்றாட்டு

ஆசை எட்வேட்

பிரேசில் நாட்டின் ஒரு பிரதேசத்தில் உண்மையில் நடந்த கதை இது.....
இவ்வூரில் மக்கள் குறையேதும் இல்லாமல் பழுதில்லாமல் வாழ்ந்து வரலாயினர். இப்படியே சுகமாய் சீராய் வாழ்ந்து வரும் போது இறைவனின் சோதனை ஏற்பட்டதோ என்னவோ கெட்ட காலம் அம்மக்களுக்கு ஏற்படலாயிற்று!....

சில வருடங்களாக மழை பெய்யவே இல்லை. எங்கும் வரட்சியே நிலவியது! பயிர்கள் ஒன்றும் விளையவில்லை. ஏன் ஒரு புல்லுக்கூட முளையாமல் போனது! உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடியது! ஒருவருக்கும் ஒரு தொழிலும் இல்லாமல் போனது. வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டு போனது!

இந்நிலையில் அம்மக்களுக்கு என்ன தான் செய்ய இயலும்?.... அவ்வூரில் ஒரு மாதா கோவில் இருந்தது. எல்லோரும் அங்கே தஞ்சம் புகுந்தனர். கெட்ட துன்பம் வந்த பின்னால் தானே கடவுளைத் தேடுகிறார்கள் யாவரும்!

"ஆண்டவரே,மாதாவே, எங்கள் பாடு கேடுகளைப் பாரும் எம் மீது இரங்கும் கருணை கூரும் என்று இறைஞ்சினார்கள். உள்ள செபங்கள்,ஆராதனைகளை எல்லாம் சொல்லி அழுது மன்றாடினார்கள். அந்த கோவில் வளாகம் முழுக்க அழுகையும் ஒப்பாரியுமாயே இருந்தது! ஆனால் சனங்களின் துன்ப துயரங்கள் தீர்ந்த பாடாயில்லை!

அம்மாதா கோவிலின் பாதிரியார் இவற்றை எல்லாம் நாளும் பொழுதும் பார்த்தது மிகவும் மனம் நொந்து உருகினார். இம்மக்களின் துயரங்கள் தீர வேண்டி இறைவனிடம் மனமுருகி மன்றாடினார்! "ஆண்டவரே, இம்மக்களை கண்ணோக்கும், இவர்களின் பஞ்சம் பசி தீரும்" என்று உண்ணா நோன்பிருந்து வேண்டிக் கொண்டே வந்தார்.

தனக்காக இல்லாமல் பிறருக்காக மன்றாடியதால் அவரது மன்றாட்டு ஏற்றுக் கொள்ளப் பட்டது...
பிறகு என்ன நடந்தது? நாடெங்கும் நல்ல மழை பொழிந்தது! பயிர் பச்சைகள் வளர்ந்து நல்ல பயனைக் கொடுத்தன. பஞ்சம் பசி தீர்ந்து மக்கள் வழமைக்கு திரும்பினர். இதன் பிறகு என்ன நடந்தது என்பது தான் ஆச்சரியமானது!...

கோவிலுக்கு ஒருவரும் போவதில்லை. அங்கு ஒருவரையும் காணவில்லை பாதிரியார் மட்டும் தனித்திருந்து செபித்துக் கொண்டிருந்தார்.

**சோம்பேறி**

**உங்களைப் பற்றி நீங்கள் நினைப்பதை விட மற்றவர் உங்களைப் பற்றி நினைக்கும் நேரம் மிகவும் குறைவு என்பதை நீங்கள் உணர வேண்டும். மற்றவர்கள் தங்களை முன்னேற விடாமல் தடுத்து நிறுத்த முயல்கிறார்கள் என்று கற்பனை செய்து கொள்ளும் மனிதன் உண்மையில் ஒரு சோம்பேறி**

**- ரஸ்ஸல்**

01. புனித வியாழன் மாலை 4.30 மணியளவில், திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்கள், "Regina Coeli" என்றழைக்கப்படும் சிறைக்கூடத்தில், இயேசுவின் இறுதி இராவுணவுத் திருப்பலியை நிறைவேற்றினார்.



இத்திருப்பலியில், திருத்தந்தையால் காலடிகள் கழுவப்பட்ட 12 கைதிகளில், 4 பேர் இத்தாலியர், ஏனையோர், பிலிப்பீன்ஸ், மொராக்கோ, மால்தோவா, கொலம்பியா, நைஜீரியா மற்றும் சியெரா லியோனே ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

பன்னிருவரில் எட்டு பேர் கத்தோலிக்கர், இருவர் இஸ்லாமியர், ஒருவர் ஆர்த்தடாகடஸ் சபையினர், மற்றொருவர் புத்த மதத்தினர் ஆவார்.

---

இலங்கையின் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக, அருள்பணி **Jayakody Aratchige Don Anton Jayakody** அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏப்பிரல் 4 புதனன்று நியமித்துள்ளார்.



இதுவரை இம்மறைமாவட்டத்தின் துணை ஆயராகப் பணியாற்றி வந்துள்ள ஆயர் **Vincent Marius Joseph Peiris** அவர்கள் பணி ஓய்வு பெற விரும்பி அனுப்பிய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை, அருட்பணி **Jayakody** அவர்களை புதிதாக நியமித்துள்ளார்.

ஆதாரம் : – வத்திக்கான் வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்துமா நோயும் முதலுதவியும்



சந்தான்பிள்ளைதேவசகாயம்
முன்னாள் மாவட்டஆணையாளர்
புனித.ஜோன் அம்புலன்ஸ்
திருக்கோணமலை—நியூயோர்க்

உலகில் வாழும் மனித இனத்தை ஒரு பக்கம் அணு ஆயுதங்கள் அச்சுறுத்தி வந்தாலும், மறுபுறம் பல்வேறு தொற்றுநோய்களும், பிறநோய்களும் அழிக்க முயற்சிக்கின்றன. இந்த நோய்கள் பற்றிய பொதுவான அறிவும், விழிப்புணர்வும் இருக்குமாயின் மனித இனம் மிகப்பெரியளவான ஆபத்துக்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். அந்த வகையில் மனித இனம் எதிர்நோக்கும் நோய்களில் ஒன்றான ஆஸ்துமா நோய் பற்றியும், அதன் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெறுவது பற்றியும், இந்த நோயின் தன்மை விரைவாக அதிகரிக்கும் போது எவ்வாறான முதலுதவியை பின்பற்ற வேண்டும் என்பதைப்பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

ஆஸ்துமா (Asthma) என்பது பெரும்பாலனவர்களில் காணப்படும் நீண்டகால சுவாசநோயாகும். நுரையீரல் மற்றும் சுவாசக் குழாய்களில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக உண்டாகும் "இளைப்பு"அல்லது இழுப்புநோயே ஆஸ்துமா ஆகும். இதன் விளைவாக சுவாசிப்பதில் சிரமம், மார்பு இறுக்கம், மற்றும் காலப்போக்கில் அதன் தாக்கம் தீவிரம் அடையும் போது வழமைக்கு மாறான இருமல் போன்ற அறிகுறிகளை அவதானிக்க முடியும்.

ஒவ்வாமைத் தூண்டும் காரணிகள், காலநிலை மாற்றம் (குளிர்,வெப்பம்), சுவாசத்தொற்றுக்கள் போன்ற பல்வேறு தூண்டலுக்கு மூச்சுக்குழாய் உட்படும்போது அழற்சிதரும் தூண்டற்பேறு காரணமாக சுவாசப்பாதை ஒடுங்குவதன் மூலம் இந்த நோய் ஏற்படுகின்றது. குறிப்பிட்ட சிலமாத்திரைகள், மருந்துகள், சிகரட் புகை, சிலவகையான உணவுகள், பூவின் மகரந்தம், தூசி(புத்தகம், ஆடைகள், வீட்டுத்தூசி, பழையபொருட்கள்), விலங்குகளின் முடி, போன்ற காரணிகளும் இவ்வொவ்வாமையைத் தூண்டக்கூடியவைகளாகும். இதனைவிட மன அழுத்தமும் இந்நோயை ஏற்படுத்தகூடிய மற்றுமொரு காரணியாகும்.

இது ஒரு தொற்று நோய் இல்லை இருப்பினும் இந்நோய் குழந்தைகள் முதல் முதியவர்வரை அனைவரையும் பாதிக்கின்றது. குறிப்பாக சிறுபிள்ளைகளில் இந்நோய் ஏற்படும்போது உறக்கம் மாத்திரமன்றி கல்வி நடவடிக்கைகளும் கூட பாதிக்கப்படுகின்றது. உடல் ஆரோக்கியமாக இருக்கும் போதிலும்கூட ஆஸ்துமா தொல்லைக்கு பலர் உட்பட்டு வருகின்றனர். இந்நோய் ஒருவரை வாழ்நாள் முழுவதும் பாதிக்கக்கூடியது. இதனை முறையான வைத்திய ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலமும், ஒவ்வாமையை ஏற்படுத்தும் காரணிகளை சரியாக இனங்கண்டு, அதனைத் தடுப்பதன் மூலமும் இந்நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். ஒவ்வாமை ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்டது. ஒவ்வொரு நோயாளிக்கும் தங்களது ஆஸ்துமாவை அதிகரிக்கும் தூண்டுதல்கள் அல்லது ஒவ்வாமைகளை அடையாளம் காண்பது மிகவும் அவசியமாகும்.

இந்த நோயின் ஆரம்ப கட்டங்களை மக்கள் அறிந்திருப்பதில்லை. மக்களின் பழைமைவாத சிந்தனைகளால், ஆஸ்துமா நோயாளிகள் கூட ஆஸ்துமா ஒரு உயிருக்கு அபாயமிக்க ஒரு நோய் என அறிந்திருப்பதில்லை. இந்த அறியாமையின் விளைவாக ஆஸ்துமா நோய்த் தாக்கத்திற்கான அளவு அதிகரித்து வருகின்றது. ஆஸ்துமா நோய்க்கு இரண்டு வகையான சுவாச உறிஞ்சிகள் (Inhalers) பயன்படுத்தப்படுகின்றன. அதில் ஒன்று, வீங்கி ஒடுங்கும் சுவாசக்குழாயை விரிவடையச் செய்து மூச்செடுப்பதை இலகுவாக்கி, நோய் நிலைமையிலிருந்து விடுபட உதவுகிறது. மற்றயது நோய்த்தடுப்பு நிவாரண உறுஞ்சிகள் (Inhalers). இது நோய் அறிகுறிகளைத் தடுக்க தினசரி பயன்படுத்த வேண்டும். அது சுவாசக்குழாயின் உணர்திறன் மற்றும் ஒவ்வாமையினைத் தூண்டும் காரணிகளின் தூண்டற்பேற்றினைத் தடுகின்றது. இந்த நோய்த் தடுப்பு உறுஞ்சிகள் (Inhalers) நோய் அறிகுறிகள் இல்லாத போதிலும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் நாடி

இருப்பினும் இவ் உறுஞ்சும் மருந்தினைப் பாவிப்பது பற்றி நோயாளிகள் தவறான கருத்தினைக் கொண்டுள்ளனர். அதாவது ஒரு முறை இம்மருந்தை பயன்படுத்தினால் வாழ்நாள் முழுவதும் அதில் தங்கிவிடுவோம் என்று கருதுகின்றனர். இதன் விலை உயர்வாக உள்ளதும் மற்றொரு காரணமாகும். எனவே இந்நோய் பற்றிய சரியான விழிப்புணர்வினை மக்கள் பெற்றுக்கொள்ளுதல் மிக அவசியமாகின்றது. இந்நோயானது திடீரென ஒருவருக்கு அதிகரிக்கும் போது அவருக்கான முதலுதவி செய்தல் மிகவும் அவசியமாகும். அவ்வாறு நோய் அதிகரிக்கும் போது நோயாளியில் பின்வரும் நோய் அறிகுறிகளை அவதானிக்கலாம்



1. சுவாசிப்பதற்கு சிரமப்படுவார் (பெரும்பாலும் வெளிச்சுவாசம்)
2. சுவாசிக்கும் போது கிச்,கிச் சத்தம் கேட்கும். (Wheezing).
3. பேசுவதற்கு சிரமம்ப்படுவார்.
4. இருமலுடன் காணப்படுவார்.
5. படபடப்பும் பதட்டத்துடன் காணப்படுவார்.
6. நாடிவேகமாகத் துடிக்கும்.
7. இந்தநிலை அதிகரிக்கும் போது சிலவேளை சுயநினைவை இழப்பார், சுவாசம் தடைப்படலாம்.

**முதலுதவி:**

**இவ்வாறான சந்தரப்பத்தில் பின்வரும் முதலுதவி முறைகளைப் பின்பற்றி அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.**

**அஸ்துமா நோயாளர்கள் பொதுவாக உறுஞ்சும் மருந்துகளை (inhaler) தம்மிடம் வைத்திருப்பர்கள். நோயாளிக்கு பயத்தினைப் போக்கும் வகையில் அமைதியாகப் பேசி நோயாளியிடம் இருக்கும் உறுஞ்சும் (inhaler) மருந்தினை உடனடியாக உறுஞ்சுவதற்கு இடமளிக்கவும்**

1. **நோயாளியின் சுவாசம் சீரானால், மெதுவாக சுவாசிக்கத் தொடங்கி பின்னர் ஆழமாக சுவாசிக்குமாறு அறிவுறுத்தவும்.**
2. **நோயாளியை படுக்க வைக்கக்கூடாது. மாறாக சௌகரியமாக கதிரையில் அல்லது அதற்கு நிகரான பொருளில் உட்காரவைத்து முன்நோக்கி சரிந்தவாறு இருக்கச்செய்யவும்**
3. **சுவாசிக்கும் சிரமம் ஓரளவு குறைந்த நிலையில் காணப்படுவராயின் 3 நிமிடங்களின் பின்னர் மீண்டும் ஒரு தடவை உறுஞ்சும் மருந்தை (inhaler) உறிஞ்சக்கொடுக்கவும்.**
4. **நோயாளிக்கு அஸ்துமாவை ஏற்படுத்துவதற்கு ஏதுவான காரணிகள் ஏதாவது அவருக்கு அருகில் இருப்பின் உடனடியாக அதனை அகற்றுதல் வேண்டும்.** (உ+ம்: சிகரட் புகை, தூசி...)
5. **நோயாளி இருதடவைகள் உறுஞ்சும் (inhaler) மருந்தினை பாவித்தும், நோயின் தன்மை குறையாது, தொடர்ந்தும் சுவாசிக்கவும், பேசுவதற்கும், சிரமம்ப்படுவாராயின், உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்**
6. **வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு செல்லும் போது, வைத்தியசாலைக்கு செல்லும் வரை நோயாளியின் சுவாசம், நாடித்துடிப்பு என்பதனை பரிசோதித்துக் கொண்டு செல்லுதல் வேண்டும்.**
7. **இவ்வாறான சூழ்நிலையில் நோயாளி சுயநினைவினை இழப்பாராயின் அவரது சுவாசப்பாதையினைத் திறந்து சுவாசத்தினைப் பரிசோதித்தல் வேண்டும். சுவாசம் காணப்படுமாயின் அவரை மயக்க மீள்நிலையில் வைத்து அவரது பிரதிபலிப்பின் அளவினை (level of response) பரிசோதித்துக் கொண்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.**
8. **சுவாசம் தடைப்படுமாயின் சுவாச, இதய தொழிற்பாட்டை (Cardio pulmonary Resuscitation-CPR) செய்து கொண்டு வைத்தியசாலைக்குச் செல்லவும். (இந்த செய்முறையினை முறையாகப் பயிற்சி பெற்ற ஒருவரால் மட்டுமே செய்யமுடியும் என்பதைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்)**
9. **முதல் தடவையாக இந்நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டவராயின் அவரிடம் எவ்வித மருந்துகளும் இருக்காது. அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லுதல் வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகக் கதை

# மகிழ்ச்சியே எல்லை





அ.இராசேந்திரம்
ஓய்வு நிலை அதிபர்
மூதூர்.

வயலும் வயல்சார்ந்த இடங்களும் உள்ள அழகான மருத நிலம். அயலிலே வயலை வளமாக்கும் தாமரை மலர்கள் நிரம்பிய அழகிய குளம். குளத்தின் கரையில் சிறுசிறு பற்றைகள் பற்றைகளின் இடையில் இரண்டொரு மரங்களும் அளவாக வளர்ந்து ஆங்காங்கே நிற்கின்றன. நீர் வளம் நிறைந்திருந்த போதும் இலையுதிர் காலமாதலால் தெரிகின்ற மரங்களும் இலைகள் சொரிந்து பட்ட மரங்கள் போலவே காண்கின்றன.

அறுவடைக்கு ஆயத்தமாக உள்ள அந்த வயல் வெளியிலே அந்தி சாய்ந்து கொண்டிருக்கும் ரம்மியமான இந்த வேளையிலே சூடு தணிந்த இளம் தென்றல் மிக இதமாக நெற்கதிர்களைத் தாலாட்டிக் கொண்டிருக்கிறது.

பகல் முழுவதும் பறந்து பறந்து உணவு தேடி களைத்துப்போன இரண்டு அழகான மணிப் புறாக்கள் இதந்தேடி அந்த நேரத்தியான சூழலிலே இலைகளற்ற மரம் ஒன்றிலே பக்கத்துக்குப் பக்கமாக வந்து அமர்ந்து கொள்கின்றன. அலம்பலான அந்த மரக்கிளையிலே தாங்கள் இருவரும் அமர்ந்திருக்கின்ற அழகிய தோற்றம், பக்கத்தே உள்ள பசுமையான புற்களும், பற்றைகளும், இலைகள் உதிர்ந்து நிற்கின்ற மற்றைய மரங்களும், மற்றவை யாவுமே களங்கமில்லாது, ஓட்டமில்லாது, தெளிந்து நிற்கின்ற அந்தக் குளத்து நீரிலே அழகாக தெரிந்து கொண்டிருப்பதைப் பார்த்து இரசித்த படியே அமர்ந்திருக்கின்றன. ஆளை ஆள் வருடியபடியே இன்றையப் பகல் முழுவதும் தாங்கள் பெற்ற அனுபவங்களைப் பற்றி கலந்துரையாடின போலும்,

நாங்கள் இருவரும் இவ்விடம்நோக்கி வரும் போது இரண்டு மூன்று காகங்கள் சேர்ந்து கூவும் குயிலொன்றைத் துரத்திக் கொத்தி விரட்டிப் போகின்றனவே, ஒருவரைப் பல பேர் தாக்கிப்போவது பாவமல்லவா? ஏன் இந்த கொடுஞ்செயல்? என்றது பெண்புறா.

நாளும் பார்த்துக் கொண்டுதான் வந்தேன். குயில் செய்கின்ற அத்துமீறல்களைக் கண்டுணர்ந்தால் இப்படியான கேள்வியை என்னிடம் கேட்டிருக்கவே மாட்டாய். அப்படி எதைத் தான் செய்து விட்டது அந்த குயில்? என்று செல்லமாகவே கேட்டது பெண்புறா.

சொல்கிறேன் கேள். நீ மற்றைய பலவிதமான பறவைகளையும் பார்த்திருப்பாய் மைனா, கிளி போன்ற பறவைகள் ஒவ்வொன்றும் தத்தமக்கு ஏற்றாற்போல் மரப்பொந்துகளிலேயும், மற்றும் பலது மரக்கிளைகளிலேயும் மரக்குச்சிகள், தும்பு, பஞ்சு, என்பனவற்றைக் கொண்டு மனிதர்கள் எவரும் செய்ய முடியாத அளவு எம்மைப் போலவே அழகிய கூடுகளை அமைத்து அவற்றிலே முட்டையிட்டு அடைகாத்து குஞ்சுகள் பொரிக்க வைத்து பறக்கும் வரையும் இரைதேடி ஊட்டி வளர்க்கின்றன.

இவற்றுக்கு மேலாக, தூக்கணாங் குருவியைப் பார்த்திருப்பாய்? இவை அமைக்கின்ற கூடுகள் மற்றையப் பறவைக் கூடுகளிலும் பார்க்க விநோதமாக வித்தியாசமாக தொங்கி ஆடும் வகையிலே மழை வெயில் என்ற இயற்கைத் தாக்கங்களிலேயே இருந்து பாதுகாக்கக்கூடிய வகையிலே ஒரே மரத்தில் பல கூடுகளை அமைத்து சுற்றும் சூழ கூட்டமாகவே வாழ்ந்து வருகின்றனவே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவகக் கதை

இவை மட்டுமல்ல, அதோ பார். நீர் பாயும் வாய்க்காலின் மேலாகப் போடப்பட்டிருக்கின்ற பாலத்தின் கீழ் பக்கமாக ஓரினப்பறவைகள் பறந்து திரிகின்றனவே"

வா. இருவரும் பாலத்தின் ஓரமாக அமர்ந்து இருந்து நடப்பதைப் பார்த்து வருவோம். இருவருமாக எழுந்து பறந்து பாலத்தின் ஒரு பக்கமாக அமர்ந்து கொண்டன.

அங்கேயும் அதிவிநோதமான கூடுகள் பலது பாலத்தின் சுவர்களிலே ஒட்டப்பட்டிருந்தன. அவைகள் அத்தனையுமே களிமண்ணினால் ஆனவை. இவற்றை எந்த மனிதனுமே ஆக்கிக் கொடுக்கவில்லை.

அந்த சின்னஞ் சிறிய பறவை, நீரக் கரைகளிலே இருந்த களியை சின்னஞ்சிறிய தமது அலகுகளினால் சிறுகச் சிறுகக் கோதி வந்து பக்குவமாகவே ஒட்டி கூடமைத்து அவற்றிலே முட்டைகளை இட்டு குஞ்சுகள் பொரித்துப் பாதுகாத்து வருகின்றன. பாலத்திலே எத்தனை கூடுகள் ஒட்டி இருக்கின்றன என்பதைப் பார்க்கின்றாயா? இவை அனைத்தும் ஒரு சோடிக் குருவிக்குரியவை அல்ல. பல சோடிகளுக்குரியவை. நாம் முன்னர் பார்த்த தூக்கணங்குருவியைப் போலவே கூட்டமாக ஒன்றிணைந்து கூட்டுக் குடும்பங்களைப் போல சேர்ந்து வாழ்கின்றன.

அடைகாக்கும் குருவிகள் சிலது தாம் இருக்கும் இடத்தில் இருந்த படியே நம்மை அவதானிப்பதைப் பார்க்கிறாய் அல்லவா? நமது அவதானிப்பு கூட அவற்றுக்கு இடைஞ்சலாக இருக்கலாம். வா இருவருமே இருந்த இடத்துக்கே போய்விடுவோம். பழைய இடத்திலே அமர்ந்து கொண்ட பின்னர், மீளவும் ஆண்புறா கூறுகின்றது. ஆக்க பூர்வமான அறிவினை ஒவ்வோர் பறவை இனத்துக்கும் அளித்து வழி நடத்தும் இறைவன் குயிலுக்கு அழகாகக் கூவும் ஒலியைக் கொடுத்து கூடுகட்டி வாழும் முறையைக் கற்றுக் கொடுக்க மறந்து விட்டாரே!

கூடு கட்டத்தெரியாத குயில் காகத்தின் கூட்டிலே களவாக ஒழித்து ஒழித்துப்போய் முட்டைகளை இட்டு வந்து விடுகின்றது.

ஏமாந்த காகம் செய்வதை அறியாது தனது முட்டைகளுடன் ஒத்திருந்த அந்த முட்டைகளையும் சேர்த்தே அடைகாக்கின்றது. குஞ்சுகளும் வெளிவருகின்றன.

தாய்ப் பறவைகளான இரு காகங்களும் அலைந்து திரிந்து உணவுகளைத் தேடி வந்து குஞ்சுகளை ஊட்டி வளர்க்கின்றன. குஞ்சுகள் பறக்கும் பராயம் வரும் போது தான் அவை கத்துகின்ற ஓசையைக் கொண்டு தமது ஏமாற்றத்தை உணர்ந்து கொள்கின்றன. குயிலின் குஞ்சுகளை இனங்கண்டு கொத்திக் கலைக்கின்றன. குயிலின் குஞ்சுகள் அப்போது தான் காகங்களின் மூலமாகவே வெள்ளோட்டமாகவே பறக்கவும் கற்றுக் கொள்கின்றன எனலாம் இதன் விளைவாகத் தான் குயில்களைக்காணும் போதெல்லாம் காகங்கள் கொத்திக்கலைக்கின்றன.

அப்படியா சமாச்சாரம்? காகங்கள் செய்வது சரிதானே? நாம் கூட அப்படித்தான் செய்திருப்போம். என்று கூறியும் கூறாமலும் இருக்கின்ற போது தாங்கள் இருக்கும் மரத்தினடியிலிருந்து நாகம் ஒன்று தங்களை நோக்கி ஏறிவருவதை தெளிந்த நீரில் தெளிவாகவே தெரியக் கண்டு கொண்ட இரு புறாக்களும் அமைதியைக் கலைத்த நாகத்தை நொந்து கொண்டு கூட்டாகவே பறந்து சென்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய ஓசை



சுசை எட்வேட்

சென்ற முறை ஒரு ஈழத்தமிழ் எழுத்தாளரின் நூல் வெளியீட்டில் நிகழ்ந்த அபகீர்த்தியை வெளியிட்டிருந்தோம். அவரின் ஆக்கப்படைப்பை ஆவலோடு பெற்றுச் செல்வதற்காக இலக்கிய ரசிகர்களோ வாசகர்களோ வெகுஜனங்களோ யாரும் வரவில்லை! அவரைப் போன்ற ஆக்க இலக்கிய படைப்பாளிகள் மட்டுமே வந்து, அதுவும் இவர் தங்களின் புத்தக வெளியீட்டிற்கு வந்தவர் என்பதால் நன்றிக்கடனுக்காக வந்தனர் என்பதையும் குறிப்பிட்டிருந்தோம். ஈழத்தமிழினம் கலை இலக்கியத்திலும் எவ்வளவு கீழ்நிலையில் போய்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டு இனி தமிழும் தமிழினமும் மெல்ல சாகும் என்பதையும் கோடுகாட்டியிருந்தோம்...

எம் சங்ககாலப் புலவர்கள் முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம், சங்கமருவிய கால மென்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பல்லாயிரம் பல்லாயிரம் பாமாலைகளால் இலக்கியம் காவியம் நீதி நெறிகள் படைத்து தமிழை வளர்த்து உயர்ந்தோங்கச் செய்தவர்கள்! தமிழர் தம் வாழ்வையும் ஒழுக்கத்தில்... நீதி நெறியில் நிலைத்திருக்கச் செய்தவர்கள்! தமிழ்மன்னர்களும் தமிழ்ப் புலவர்களை கௌரவித்து அரசவையில் செல்வாக்குச் செலுத்த வைத்திருக்கிறார்கள் அவர் தம் ஆக்கங்களுக்கு பொற்கிழியும் பரிசுகளும் கொடுத்து சிறப்பித்திருக்கிறார்கள்! முத்தமிழ் சங்கத்துக்கும் ஆன உதவி செய்து தமிழ் வேர் விட்டு முளைவிட்டு கிளைவிட்டு சிறந்தோங்க சிறப்பான உதவிகளை நல்கியிருக்கிறார்கள்!

உலகத்தில் நாலாயிரம் மொழிகள் இருக்கின்றன. அவற்றில் எட்டு மொழிகளுக்கே செம்மொழி அந்தஸ்து கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் தமிழும் ஒன்று!....தமிழ் இத்தகு சிறப்பெய்த முக்கிய காலானவர்கள் யார்? சந்தேகமே இல்லை, நம் தமிழ்ப்புலவர்கள் தான்! தம் கவிதைகளால் காவியங்களால் நீதிநெறி சொல்லும் பாமாலைகளால் தமிழ்த்தாயை அலங்கரித்து சிம்மாசனத்தில் இருத்தினார்கள்! அதன் பலாபலனே இந்த செம்மொழி அந்தஸ்து!... அமெரிக்க மேற்குலக விஞ்ஞானிகள் மொழிகள் பற்றி விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்து ஓர் அரிய உண்மையை வெளியிட்டிருக்கிறார்கள்.... ஆதி மனிதன் வாய்திறந்து முதல் முதலில் பேசிய மொழி தமிழாம்!!!

இன்னும் கேளுங்கள் சிந்து வெளியில் தான் முதல் நாகரீக மனிதன் தோன்றினானாம்! அதாவது மிருகங்களில் ஒன்றாய் இல்லாது இன்றிருக்கும் ஒழுக்க நெறி நீதி நெறி கலை கலாசாரமுள்ள மனிதன் அங்கேதான் முதலில் வாழ்ந்தான் என்று செப்புகின்றனர் ஆய்வு அறிஞர்கள்!... ஆகுமொழிகள் எத்தனையோ வழக்கொழிந்து போயின ஆதி இனங்களும் வேற்றினங்களாகி உருத்தெரியாமல் ஆகிவிட்டன!.. ஆனால் தமிழ் மொழியும் தமிழினமுமே கால ஓட்டத்துச் சீரழிவுகளால் சீரழியாது சீர்மை பெற்று வாழ்ந்து வருகின்றது! அதனாற்றான் கன்னித் தமிழ் என்றனர் போலும்!...

அந்தக் கன்னித்தமிழும் தொன்மை தமிழினமும் இனிவரும் காலத்திலும் சிறப்புறுமா, தம் இருப்பை தக்கவைத்துக் கொள்ளுமா? தடம்மாறி உருத்தெரியாமல் போகுமா? எனும் வினாக்களுக்கு உருப்படியான பதில் நமக்கு கிடைப்பதாயில்லை!

ஆனால் நாம் முன்னர் குறிப்பிட்டது போல மெல்ல தமிழினச் சாகும் என்ற கூற்றே உண்மையானதாகும்! அதற்கான அறிகுறிகளே நமக்கு கிடைத்து வருவதாகும்! தமிழினம் படும் பாட்டை சொல்லி மாளாது! ஓர் ஆதிப் பெருமைக்குரிய இனத்தை அழித்து விடுவதில் குறியாயிருக்கிறது பேரின அரசு! அதை விரிக்கின் அது அரசியல் கட்டுரையாகிவிடும் ...தமிழும் இலக்கியமும் நம் ஈழத்திரு நாட்டில் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதை அடுத்த தொடரில் பார்ப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலும் நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலும்...

-பெரியவன்

பெரிய போராட்டங்களின் மத்தியில் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ திணிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒருவாறு முடிவடைந்து விட்டன. எனினும் மழை விட்டும் தூவானம் விடாத கதையாக அநேகமான உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மையை எந்த கட்சியும் பெறாத நிலையில் தொங்கு நிலைமையையே எதிர்நோக்கியுள்ளன. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமிழர் தேசிய கூட்டமைப்பு எதிர்பாராத பல பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளது.

தமிழர்களின் ஒற்றுமை பலமே எமது மீட்சி என்ற நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையில் உருவாக்கப்பட்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பு பல கூறுகளாகப் பிரிவடைந்துள்ளது. ஆரம்பத்திலிருந்தே தனி வழி சென்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி), கூட்டமைப்புடன் சேராமல் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி சுரேஸ் பிரேமச்சந்திரனின் அரசியல் மீளஹுக்கு பயன்படுத்தப்பட்ட கட்சி. தமிழ்தேசியக் கூட்டமைப்பை எதற்கெடுத்தாலும் விமர்சிப்பதையே குறிக்கோளாக கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி என்பன தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளைப் பிரிப்பதையே நோக்கமாகக் கொண்டு தேர்தலில் களமிறங்கின. அதைத் தவிர சில சுயேச்சைக் குழுக்களும் அவ்வாறான கருமங்களில் ஈடுபட்டிருந்தன. அம் முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்றிருந்தன. உதாரணமாக ஈபிடிபி கட்சி. தமிழர் காங்கிரஸ் கட்சி வடக்கில் இரு சபைகளிலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கிழக்கில் இரு சபைகளிலும் கூடிய ஆசனங்களைப் பெற்றிருந்தன.

இவையாவும் தேர்தலில் திட்டமிடப்பட்ட பிரச்சாரங்களினதும் இவ் உள்ளூராட்சி தேர்தல் தெரிவு முறையானதுதிட்டமிடப்பட்ட முறையில் சிறு பான்மைக் கட்சிகளை சின்னபின்னமாக்கியதினதும் விளைவு என்றே கருத வேண்டியுள்ளது.

அதே வேளை இத்தேர்தலின் மூலம் தமிழர் தேசிய கூட்டமைப்பு மட்டும் தான் இனி வரும் காலங்களில் தமிழருக்கான அரசியல் உரிமை கோரும் கட்சி அல்ல என்பதை தமிழ் மக்கள் சுட்டி காட்டியுள்ளதுடன் கூட்டமைப்புக்கான எச்சரிக்கையையும் விடுத்திருந்தமை தெட்டத் தெளிவானது. கடந்த காலங்களில் பல கடினமான சோதனைகளைப் பொறுத்து மீண்டெழுத்துடிக்கும் தமிழினம் தமக்கான நல்ல தீர்வு ஏற்படும் என்ற ஆவலுடன் காத்திருக்கும் நிலையிலே களச் சமநிலை குழம்பியுள்ளது.

எது எப்படியிருந்த போதிலும் எதிர்வரும் செப்டம்பரில் நடைபெறப்போவதாக கூறப்படும் மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தின் நிலை எப்படி அமையப் போகிறது என்ற கேள்வி அக்கறையுள்ள தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சிந்தனையை தூண்டியுள்ளது. இந்த நிலையைப்பற்றி சிந்தித்த புத்தி ஜீவிகள் குழுவொன்று "கிழக்கு தமிழர் ஒன்றியம்" என்ற பெயரில் மாவட்ட மட்டத்தில் அறிவு ஜீவிகளை சந்தித்துக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். புத்திஜீவிகளில் அதிகமானோர் கிழக்கு மாகாணத்தில் தமிழ் முதலமைச்சரை உருவாக்க அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து வாக்குகளைச் சிதற விடாமல் உறுப்பினருக்கான எண்ணிக்கையை கூட்டவெண்டும் என்று நினைக்கிறார்கள். எனினும் அரசியல் வாதிகளோ இந்தக் குழப்ப நிலையில் எமக்கென்ன இலாபம் என நோக்குகின்ற நிலை தொடரத்தான் செய்கிறது.

இந்தக் கள நிலவரத்தில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு தனது இடறல்களுக்கான காரணங்களைப் பகுத்து ஆராய்வதோடு இந் நிலையை மாற்றுவதற்காக என்ன நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் எனச் சிந்திப்பதும் உடனடி நடவடிக்கையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையே தொடர்ந்த தொடர்பாடல் அற்றுப்போன நிலை.

2. மக்கள் மத்தியிலுள்ள பொருளாதாரப் பின்னடைவு, தொழிலின்மை போன்ற நிலைமைகளை மாற்ற உரிய நடவடிக்கை எடுக்க முனையாமை.

3. பட்டதாரிகளின் தொழில் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு காத்திரமான நடவடிக்கை எடுக்காமை.

4. காணாமற் போனோரின் உறவினர் போராட்டம் ஒரு வருடமாகத் தொடர்ந்தும் முடிவுகள் அற்று தொடருகின்ற நிலைமை.

5. காணி விடுவிப்பிலும் மீளக்குடியேற்றலிலும் தொடரும் மந்த நிலை.

6. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தெரிவில் சறுக்கிய தன்மை.

7. எதிரிக் கட்சிகளின் பிரசார நடவடிக்கைகளினை முறியடிக்க போதிய தந்திரோபாயங்கள் பின்பற்றாமை.

8. உள்ளூராட்சித் தேர்தலின் உண்மை சூட்சமங்களை விளங்கிக் கொள்ளாமல் போக்கடி போக்கில் அத்தேர்தலை அணுகிய விதம்.

9. தேர்தல் முடிந்த பின்பும் வாக்களித்த, வாக்களிக்காத மக்களைச் சந்தித்து நிலைமைகளை விளக்கி, ஆற்றுப்படுத்தலை மேற்கொள்ளத் திராணியில்லாத வேட்பாளர்கள்.

10. தமிழ் மக்கள் மத்தியில் ஊடுருவியுள்ள போதைவஸ்து பாவனை கலாசாரச் சீர்கேடுகளைக் கண்டும்... தெரிந்தும் காணாமல் இருத்தல்.

11. தமிழர் தேசிய கூட்டமைப்பின் மீதுள்ள நம்பிக்கையைத் தக்கவைக்க செயற்திட்டங்களற்ற நிலைமை.

போன்ற பல எழுவினை (Issue) களை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் பொருத்தமான திட்டங்களை வகுத்து செயற்பாடுகளை முன்னெடுத்து மக்களைத் தம்மோடு 'கொதி நிலையில் வைத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். தவறின் மாகாணசபைத் தேர்தலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இன்னும் பல பாடங்களைக் கற்பிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பின் உவகை

தவக்காலத்தில ஜெபம், ஒறுத்தல், பகிர்வு, மன்னிப்பு என இறைவனுக்கு விருப்பமான காரியங்களில் ஈடுபட்டோம். இத்தவக்காலம் முடிவுற்ற போதிலும் நம் அன்றாட வாழ்விலும் இந் நற்செயல்களை மனதில் கொள்வோம். இறைவனுக்கு உகந்த பிள்ளைகளாக வாழ்வோம்.

'ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள்
இதுவே என்று அகமகிழ்வோம்'



அலை ஓசை குடும்பத்தினருக்கும்,
வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும்

உயிர்ப்பின் பெருநாள் வாழ்த்துகள்.

வேஜின் டி குருஸ்
அன்புவெளிபுரம்.

**தன்னம்பிக்கை**

**எத்தனை தடைகள் வந்தாலும் அத்தனையையும் அறிவுப்பூர்வமாக சிந்தித்து அவற்றிக்கான வழிகளையும் கண்டறியக்கூடிய மிகப் பெரிய ஈடு இணையற்ற செல்வம் தான் தன்னம்பிக்கை**

**– ஜோன் ரஸ்கின்**

எதுவும் தானாக வருவதில்லை. நல்லது எதுவும் நிச்சயமாக வருவது இல்லை. எல்லாவற்றையும் நாமே தான் கொண்டுவர வேண்டும்.

மாணவர் ஓசை

அலை ஓசையினூடாக மாணவர்களின் கற்பனைத்திறனையும், எழுத்துத் திறனையும் மொழியாற்றலையும் வளர்க்கும் முகமாக மாணவர்களுக்கென ஓரிரு பக்கங்களை திறந்து விடக் காத்திருக்கின்றோம். ஒவ்வொரு அலை ஓசைக்குமுரிய தலைப்புகள் உங்களுக்கு வழங்கப்படும். அத்தலைப்புகளில் கட்டுரையாகவோ, கவிதையாகவோ, அனுபவப் பகிர்வாகவோ அமைத்து எமக்கு அனுப்பி வைக்கவும். கிடைக்கப் பெற்றவைகளில் தகுதியானவை தேர்தெடுக்கப்பட்டுப் பிரசுரிக்கப்படும்.

அடுத்த ஓசையின் தலைப்பு
" ஓர் ஆசிரியராக மட்டுமல்ல...

தங்களது ஆக்கங்களை பெயர் முகவரியுடன் ஆசிரியர், அலை ஓசை, இல 17 புனித அந்தோனியார் வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் அனுப்பி வைக்கவும்.



-ஆசிரியர்

அரிவையர் ஓசை

அலை ஓசையினூடாக மங்கையரின் ஆக்கங்களையும் கற்பனையையும் பயனுள்ள கருத்துக்கள், சமையல் துணுக்குகள், அழகுக்குறிப்புகள். சுகநல ஆலோசனைகள், தங்கள் குடும்பத்தில் நடந்த நகைச்சுவைச் சம்பவங்கள் போன்ற பயன் தரும் அம்சங்களுக்காக களம் அமைத்துக் கொடுக்கத் தயாராகவுள்ளோம்
.

கிடைக்கப் பெற்ற ஆக்கங்களில் தகுதியானவை தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரிக்கப்படும்.

A-4 தாளில் ஒரு பக்கத்துக்குள் அடங்கியதாக ஆக்கங்கள் அமைத்தல் நன்று தங்களது ஆக்கங்களை பெயர் முகவரியுடன் ஆசிரியர், அலை ஓசை, இல 17 புனித அந்தோனியார் வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் அனுப்பி வைக்கவும்.

-ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிர்ப் போட்டி முடிவுகள்

### அலை ஓசை ஒன்பதின் புதிர் போட்டி முடிவுகள்

தை – பங்குனி 2018 அலை ஓசையில் வெளிவந்த தூய மாற்கு நற்செய்தி அதிகாரங்கள் 1-4 வரையுள்ள பகுதிகளை அடிப்படையில் சரியான விடை எழுதிய 67 பேர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட முதல் நான்கு அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

**முதலாம் பரிசு:** V.ஜனதக்ஷன்
( இருதயபுரம், மூதூர் )

**இரண்டாம் பரிசு:** தே.ரகிலா ருலக்ஷினி
( 25, புகையிரத நிலைய வீதி, சீனக்குடா )

**மூன்றாம் பரிசு:** S.கயானி
( 256 அன்புவழிபுரம், திருகோணமலை )

**நான்காம் பரிசு:** திருமதி.சுசித்திரா குருஸ்
( மறைக்கல்வி நடுநிலையம், மன்னார்.)

மேற்படி புதிர்ப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுப் பணமான ரூ250/= உரிய பங்குத்தந்தையினூடாக அனுப்பி வைக்கப்படும். பங்குபற்றியவர்களுக்கும் பரிசு பெற்றவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

அலை ஓசை வளர்ச்சிக்கு உதவும் அன்புக்கரங்கள்

பேராலயப்பங்கு

- திருமதி சாந்தி சண்முகம்
- திருமதி A.பிரியா
- திருமதி டெல்மா சடகோபன்
- திருமதி E.மடுமலர்
- திருமதி சாந்தி ஜேக்கப்
- திருமதி ஜீ.மாலினி
- திரு. S.சந்திரகுமார்

**சந்தேகப்பாப்பாவும் சந்தேகத்தாத்தாவும்**

"திருகோணமலை பாடசாலைகளில் வெளிவாரி மதிப்பீடு என்ற பேரில் ஆசிரியர்களை நெருக்குவாரப் படுத்துகிறார்களாமே ஏன் தாத்தா?"

"புதுத்தும் புக்கட்டுகள் கூட்டும்போது நிலத்தையும் சேர்த்துத் தானே கூட்டுகின்றன. இந்த வேகம் நாளடைவில் பதனப்பட்டுவிடும் மகளே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிர்ப் போட்டி

தூய மாற்கு நற்செய்தி அதிகாரம் 05 தொடக்கம் 08 வரையுள்ள பகுதிகளைப் பயன் படுத்தி, கீழேயுள்ள வினாக்களுக்கு விடைகளை எழுதுங்கள்.

தொகுப்பு : திருமதி. ஜெயவதனி மரியதாஸ்

பெயர் ..............................................

விலாசம் ..............................................

..............................................

பங்கு ..............................................

1. யாருடைய புளிப்பு மாவைக் குறித்துக் கவனமாயிருக்கும் படி இயேசு சீடர்களுக்குக் கட்டளையிட்டார்?
..............................................
2. "கல்லறைகளே அம்மனிதரின் உறைவிடம்" இதில் அம்மனிதர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளவர் யார்?
..............................................
3. 5 அப்பங்களையும், 2 மீன்களையும் எல்லாருக்கும் பகிர்ந்தளித்த பின், எஞ்சியவற்றை எத்தனை கூடைகளில் எடுத்தனர்?
..............................................
4. 'எப்பத்தா'என்பதன் பொருள் என்ன? யாரை நோக்கி இயேசு இதைக் கூறினார்?
..............................................
5. தொழுகைக் கூடத் தலைவரான யாயீர் என்பவருடைய வீட்டுக்கு இயேசு தம்முடன் யாரையெல்லாம் அழைத்துச் சென்றார்?
..............................................
6. "நீங்கள் நான் யார் எனச் சொல்லுகிறீர்கள்?" என்று இயேசு சீடரிடம் கேட்டதற்குப் பேதுரு கூறிய பதில் என்ன?
..............................................
7. 'தலித்தா கூம்' என்பதன் பொருள் என்ன?
..............................................
8. மனிதர்களைத் தீட்டுப்படுத்துபவை எவையென இயேசு மக்கள் கூட்டத்திடம் கூறினார்?
..............................................
9. இறைவாக்கினர் எங்கு மதிப்புப் பெறுவர் என, தம்மை ஏற்றுக் கொள்ளத் தயங்கியவர்களிடம் இயேசு கூறினார்?
..............................................
10. இயேசுவின் மேலுடையைத் தொட்டுக் குணமாகியவர் யார்?
..............................................

ஆசிரியர், அலை ஓசை , இல17, புனித அந்தோனியார் வீதி, திருகோணமலை.

உங்கள் விடைகளை 2018.06.15ம் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கிடைக்கப் பெற்றோம்......

## EDUCATION EMPOWERMENT AND TRANSFORMATION

லோயலா கம்பஸ் சிறீலங்கா அமைப்பினால் கிடைக்கப் பெற்றோம். போருக்குப் பின்னரான சமாதான உருவாக்கமும் கல்வி மீளமைப்பும் என்ற விடயம் தொடர்பாக எட்டு கட்டுரைகளை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது. மிகவும் பிரயோசனமிக்க அம்சங்களைத் தாங்கி இந் நூல் நிரஞ்சலா வீரசிங்க அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு பணிப்பாளர், லோயலா கம்பஸ், உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

கிடைக்கப் பெற்றோம்............

## சிறகடிக்கும் சிட்டுக்கள்

அருட்தந்தை செ.அன்புராசா அவர்களினால் உருவாக்கப்பட்டு மருங்கன் தமிழ்க் கலா மன்றத்தினரால் வெளியிடப்பட்ட "சிறகடிக்கும் சிட்டுக்கள்" என்ற சிறுவர் பாடல்கள் தொகுதியானது "பிஞ்சு வயதில் வன்னியிலும் சிரியாவிலும் வஞ்சிக்கப்பட்ட ஆயிரமாயிரம் குஞ்சுகளுக்கு..." என்ற சமர்ப்பணத்தில் வெளிவந்துள்ளது. 35 சிறுவர் பாடல்களைக் கொண்ட இத் தொகுதியின் ஒவ்வொரு பாடலுக்கும் சுருக்கமான சித்திரங்களையும் அமைத்துள்ளமை சிறப்பானது.

தொடர்பு : Rev. fr. S. Anpurajah
Director
Amaithikarangal
Lebera willness center for
Amputees
Mankulam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகமாயிருக்கின்றேன்



அலை ஓசை கலைத் தொடர்பகத்தினால் தயாரிக்கப்பட்டு கடந்த 2018.03.18ம் திகதி மேடையேற்றப்பட்ட இயேசுவின் திருப்பாடுகள் மேடை நாடகத்தின் சில காட்சிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org